CURRENT AFFAIRS FOR COMPETITIVE EXAMS என்னும் முகநூல் முகவரியில் ஏப்ரல் - 2016ல் பதிவு செய்யப்பட்ட நடப்பு நிகழ்வுகள் செய்திகளின் தொகுப்பு.

இதனை WORD DOCUMENTல் தொகுத்து அளித்து உதவிய நண்பர் சதா நந்தன் அவர்களுக்கு மிகுந்த நன்றிகள்.

□□□□□□: □□□□□□□□ □□□□□□□□

**For Current affairs Materials Visit: www.tnpscjob.com**

*********************************

# APRIL -- 2016

\# இந்திய சினிமாவில் கமல்ஹாசனின் சிறப்பான பங்களிப்புக்காக, பிரான்ஸ் நாட்டின் உயரிய விருதான " ஹென்றி லாங்லாய்ஸ் " வழங்கப்பட்டுள்ளது.

\# 4வது அணுசக்தி பாதுகாப்பு மாநாடு அமெரிக்காவில் வாஷிங்டன் நகரில் மார்ச் 31 மற்றும் ஏப்ரல் 01ல் நடைபெற்று முடிந்துள்ளது. அமெரிக்க அதிபர் ஒபாமா, பிரதமர் மோடி உட்பட 50க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்றுள்ளனர். அணுசக்தி பாதுகாப்பு மாநாட்டை ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் புறக்கணித்துள்ளார்.

\# வியட்நாம் நாடாளுமன்றத்துக்கு முதல் பெண் சபாநாயகராக நூயென் தி கிம் நான் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

\# ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் மார்ச் 30 அன்று Make In India மாநாடு நடைபெற்று முடிந்துள்ளது

\# 13 வது ஐரோப்பிய யூனியன் - இந்தியா மாநாடு பெல்ஜியத்தின் தலைநகர் பிரஸ்ஸல்ஸ் நகரில் மார்ச் 30 அன்று நடைபெற்று முடிந்துள்ளது. இம்மாநாட்டில் பிரதமர் மோடி கலந்து கொண்டுள்ளார்.

ஐரோப்பிய கவுன்சில் தலைவர் - டொனல்ட் டஸ்க் ( Donald Tusk )
ஐரோப்பிய கமிசன் தலைவர் - ஜீன் கிளாட் ஜன்கர் ( Jean Claude Juncker )

# உத்தரகண்ட் மாநிலம், நைனிடால் மாவட்டம், தேவஸ்தல் ( Devasthal ) நகரில் அமைக்கப்பட்டுள்ள ஆசியாவின் மிகப்பெரிய ஆப்டிகல் டெலஸ்கோப் ARIES ( Aryabhatta Research Institute of Observational Sciences ) ஐ பிரதமர் மோடி பெல்ஜியத்திலிருந்து மார்ச் 30 அன்று துவக்கிவைத்துள்ளார். இந்த தொலைநோக்கி பெல்ஜியம் நாட்டின் ஒத்துழைப்போடு தயாரிக்கப்பட்டுள்ளது.

# ஏப்ரல் - 2 ஆட்டிசம் நோய் விழிப்புணர்வு நாள் மற்றும் உலக சிறுவர் புத்தக தினம்
# ஏபரல்- 05 - தேசிய கடல்சார் தினம் (National Maritime Day)
# ஏப்ரல் - 07 உலக சுகாதார தினம் … கருப்பொருள் ( Theme) - Beat Diabetes
# ஏப்ரல் - 11 தேசிய பொதுத்துறை நிறுவனங்கள் தினம்
# ஏப்ரல் - 12 மனித விண்வெளிப் பயணத்துக்கான சர்வதேச நாள் ( International Day of Human Space Flight )
# ஏப்ரல் - 14 உலக சித்தர்கள் தினம்
# ஏப்ரல் - 18 உலக மரபுச் செல்வங்கள் தினம் ( உலக பாரம்பரிய தினம் )
கருப்பொருள் ( Theme ) - - The Heritage of Sport
# ஏப்ரல் - 21 …... 10வது சிவில் சர்விசஸ் தினம் ( குடிமைப்பணிகள் தினம் )
# ஏப்ரல் - 22 …... புவி நாள் கருப்பொருள் ( Theme) - Trees For The Earth
# ஏப்ரல் - 23 உலக புத்தக தினம்
# ஏப்ரல் - 24 தேசிய பஞ்சாயத்து ராஜ் தினம்
# ஏப்ரல் - 25 மலேரியா தினம் … கருப்பொருள் ( Theme) - End Malaria For Good
# ஏப்ரல் - 29 சர்வேதேச நாட்டிய தினம்

# அமெரிக்காவில் உள்ள Bank of the West வங்கியின் தலைவர் மற்றும் தலைமை செயல் அதிகாரியாக இந்திய வம்சவளியச்சேர்ந்த நந்திதா பக்ஷி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

# கொல்கத்தாவில் நடைபெற்ற நான்காவது உலககோப்பை மகளிர் T 20 இறுதிப்போட்டியில் ஆஸ்திரேலியாவை தோற்கடித்து மேற்கிந்தியதீவுகள் அணி முதன்முறையாக கோப்பையை கைப்பற்றியது.
இதற்குமுன் நடைபெற்று முடிந்துள்ள மூன்று முறையும் ஆஸ்திரேலிய அணியே கோப்பையை வென்றிருந்தது.

கொல்கத்தாவில் நடைபெற்ற 6வது உலககோப்பை ஆண்கள் T20 கிரிக்கெட் இறுதிப்போட்டியில் இங்கிலாந்தை தோற்கடித்து மேற்கிந்தியதீவுகள் அணி இரண்டாவது முறையாக கோப்பையை கைப்பற்றியது.

2007 - இந்தியா …, 2009 – பாகிஸ்தான் …, 2010 - இங்கிலாந்து
2012 – மேற்கிந்தியதீவுகள் …, 2014 - இலங்கை

# மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் ' இந்திய தரவரிசை 2016 ' என்ற தலைப்பில் நாட்டில் செயல்படும் கல்வி நிலையங்களில் டாப் 10 பட்டியலை வெளியிட்டுள்ளது. பொறியியல், மேலாண்மை, மருந்தியல் மற்றும் பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் என்று 4வகையாக பிரிக்கப்பட்டு தரவரிசை வழங்கப்பட்டுள்ளது.

பொறியியல் பிரிவில் ஐஐடி மெட்ராஸ் முதலிடம் பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து ஐஐடி பாம்பே, மற்றும் ஐஐடி காரக்பூர் இடம்பெற்றுள்ளன

மேலாண்மை பட்டபடிப்புகான கல்வி நிலையத்தில் ஐஐஎம் பெங்களூரு முதலிடம் பிடித்துள்ளது. ஐஐஎம் அகமதாபாத் இரண்டாமிடம் பிடித்துள்ளது. ஐஐஎம் கொல்கத்தா, ஐஐஎம் லக்னோ ஆகியவை அடுத்த இடங்களில் உள்ளன.
பல்கலைக் கழகங்களுக்கான பட்டியலில் இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆ்ஃப் சயன்ஸ், பெங்களூரு முதலிடம் பிடித்துள்ளது. ரசாயன தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், மும்பை, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், டெல்லி, ஹைதராபாத் பல்கலைக்கழகம், ஆகியவை அடுத்த இடங்களில் உள்ளன.
மருந்தியல் (பார்மசி) பிரிவில் மணிப்பால் மருந்தியல் அறிவியல் கல்லூரி நாட்டின் முதல் தரக் கல்வி நிறுவனமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

# காஷ்மீரின் முதல் பெண் முதல்வராக மெகபூபா முப்தி பதவியேற்றுள்ளார்.
அஸ்ஸாம் மாநிலத்தின் " சைதா அன்வாரா தைமூருக்கு " அடுத்தபடியாக முதல்வராக பதவியேற்கும் நாட்டின் இரண்டாவது முஸ்லிம் பெண் என்ற பெருமையும் மெகபூபா முப்தி அடைந்துள்ளார்.
ஜம்மு காஷ்மீரில் பாஜக - பிடிபி கூட்டணி ஆட்சியின் சார்பில் முதல்வராக பதவி வகித்துவந்த முப்தி முகமது சையது உடல்நலக் குறைவு காரணமாக கடந்த ஜனவரி 7-ம் தேதி உயிரிழந்தார்.

# மத்தியப் பிரதேச மாநிலம், சாத்னா மாவட்டத்தில் உள்ள முகுந்த்பூரில், உலகின் முதல் வெள்ளைப் புலிகள் சரணாலயம் துவங்கப்பட்டுள்ளது. தற்போது, இந்த சரணாலயத்தில் ரகு என்ற ஆண் வெள்ளைப் புலியும், விந்தியா, ராதா என்ற இரண்டு வெள்ளைப் புலிகளும், இரண்டு ராயல் வங்காளப் புலிகளும் உள்ளன.

# மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்திற்கான (100 நாள் வேலைத் திட்டம்) ஊதியத்தை தமிழ்நாட்டில் 183 ரூபாயிலிருந்து 203 ரூபாயாகவும், கேரளாவில் 229 ரூபாயிலிருந்து 240 ரூபாயகவும, கர்நாடகவில் 204 ரூபாயிலிருந்து 224 ரூபாயாகவும், ஆந்திராவில் 180 ரூபாயிலிருந்து 194 ரூபாயாவும் அதிகரித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

RED FLAG EXERCISE - 2016

# அமெரிக்காவில் நடைபெறும் உலகப் புகழ்பெற்ற "ரெட் ஃபிளாக்' (Red Flag) போர் விமானப் பயிற்சி ஏப்ரல் 28ஆம் தேதி முதல் மே 13ஆம் தேதி வரை அலாஸ்கா விமானப் படைத் தளத்தில் நடைபெறவுள்ளது.
இரண்டாவது முறையாக ரெட் ஃபிளாக்' சாகசப் பயிற்சியில் இந்திய போர் விமானங்கள் பங்கேற்கவுள்ளன. கடந்த 2008-ஆம் ஆண்டு இந்திய விமானங்கள் பங்கேற்றன. அதன் பிறகு 8 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது அதில் மீண்டும் இந்தியா பங்கெடுக்கவுள்ளது.
இந்திய விமானப் படைக்குச் சொந்தமான சுகோய் மற்றும் ஜாகுவார் ரகங்களைச் சேர்ந்த 8 விமானங்களும், சி-17 மற்றும் ஐஎல்-78 ரகங்களைச் சேர்ந்த 4 விமானங்களும் இந்த பயிற்சியில் பங்கேற்கின்றன.

# டெல்லி ( நிஜாமுதீன்) - ஆக்ரா இடையே 160 கி.மீ வேகத்தில் செல்லும் நாட்டின் முதல் அதிவேக கதிமன் ரயில்சேவையை ( Gatimaan Express ) ரயில்வேதுறை அமைச்சர் சுரேஷ் பிரபு துவக்கிவைத்துள்ளார். இந்த ரயில் மணிக்கு 160 கி.மீ. வேகத்தில், டெல்லி-ஆக்ரா இடையேயான 200 கி.மீ. தொலைவை 100 நிமிடங்களில் சென்றடையும்.

The Balikatan Exercise ( தோளோடு தோள் பயிற்சி )

# அமேரிக்கா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளின் கூட்டு ராணுவப்பயிற்சி The Balikatan Exercise ( தோளோடு தோள் பயிற்சி ) பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் ஏப்ரல் 04 முதல் 14 வரை நடைபெறுகிறது.
இந்த பயிற்சியில் 4000 அமெரிக்க வீரர்களும் 4500 பிலிப்பைன்ஸ் வீரர்களும் ஈடுபடுகின்றனர். மேலும் இந்த பயிற்சியில் ஆஸ்திரேலியாவின் 80 வீரர்களும், ஜப்பானின் 8 பாதுகாப்பு படைவீரர்களும் கலந்து கொள்கின்றன்ர்.

# இந்தியாவிலேயே முதன்முறையாக மகாராஷ்டிராவைச்சேர்ந்த DCB வங்கி ஆதார் ATMஐ அறிமுகம் செய்துள்ளது.
இந்த புதிய வசதியின் மூலம் ATM இயந்திரத்தில் பணம் பரிவர்த்தனைகள் செய்ய ATM கார்டு தேவை இல்லை. அதற்கு பதிலாக ஆதார் எண்ணை பதிவு செய்தபின்பு அருகில் உள்ள ஸ்கேனர் கருவியில் விரல் ரேகையை பதிவு செய்ய வேண்டும்.

# ஏப்ரல் 01 முதல் பீகார் மாநிலத்தின் கிராமப்புறங்களில் மட்டும் அமுல்படுத்தப்பட்ட மதுவிலக்கு ஏப்ரல் 04 முதல் மாநிலம் முழுமைக்கும் அமுல்படுத்தப்படுவதாக அம்மாநில முதல்வர் நிதிஷ் குமார் அறிவித்துள்ளார்.
இதுவரை குஜராத், மணிப்பூர், நாகாலாந்து ஆகிய மாநிலங்களில் மட்டுமே முழு மதுவிலக்கு அமுலில் உள்ளது.

STAND UP INDIA - எழுக இந்தியா

# தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு ரூ.10 லட்சம் முதல் ரூ. 1 கோடி வரை தொழில் கடன் வழங்க வகை செய்யும் ‘எழுக இந்தியா’ (ஸ்டாண்ட் அப் இந்தியா)

திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி டெல்லி அருகேயுள்ள நொய்டாவில் ஏப்ரல் 05 அன்று தொடங்கி வைத்துள்ளார்.
மறைந்த தலைவர் பாபு ஜெகஜீவன் ராம் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவில் ‘எழுக இந்தியா’ திட்டம் தொடங்கிவைக்கப்பட்டுள்ளது.
இத்திட்டத்தின் படி நாட்டில் உள்ள 1,25, 000 வங்கி கிளைகள் ஆண்டுக்கு குறைந்தபட்சம் இரு தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் அல்லது பெண்களுக்கு ரூ.10 லட்சம் முதல் ரூ. 1 கோடி வரை கட்டாயமாக தொழில் கடன் வழங்க வேண்டும்.

பனாமா பேப்பர்ஸ் ( PANAMA PAPERS )

# பல்வேறு நாட்டை சேர்ந்த அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், விளையாட்டு வீரர்கள், சினிமா பிரபலங்கள் ஆகியோர் சட்டவிரோதமாக பனாமா நாட்டு வங்கியில் ( சுவிஸ் வங்கி போன்று ) பணம் சேர்த்து வைத்துள்ள விபரங்களை வாஷிங்டனை தலைமையகமாகக் கொண்டு செயல்படும் புலனாய்வு இதழியலாளர்கள் சர்வதேச கூட்டியக்கம் (International Consortium of Investigative Journalism) ஏப்ரல் 03 அன்று “பனாமா பேப்பர்ஸ்” எனும் பெயரில் வெளியிட்டுள்ளது.

# விண்வெளியில் ஆய்வு நடத்திவிட்டு, மீண்டும் பூமிக்குத் திரும்பக் கூடிய "எஸ்.ஜே-10' விண்கலனை சீனா ஏப்ரல் 06ல் விண்ணில் செலுத்தியது.
சீனாவின் வடமேற்கே அமைந்துள்ள கோபி பாலைவனத்தில் அமைந்துள்ள ஜிகுவான் ஏவுதளத்திலிருந்து "லாங்மார்ச் 2-டி' வகை ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது.
கடந்த 10 ஆண்டுகளில், பூமிக்குத் திரும்பும் வகையில் சீனா அனுப்பும் 25-ஆவது விண்கலன் இது என்பது குறிப்பிடத்தக்கது

# மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் மற்றும் UNESCO அமைப்பு இணைந்து நடத்திய International Conference on Zero மாநாடு ஏப்ரல் 04 மற்றும் 05 தேதிகளில் பிரான்ஸ் தலைநகர் பாரிசில் உள்ள UNESCO தலைமையகத்தில் நடைபெற்று முடிந்துள்ளது.
இந்த மாநாட்டில் இந்தியாவின் சார்பில் மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஸ்மிருதி இராணி கலந்துகொண்டுள்ளார்.

# UNESCO தலைமையத்தில், புகழ்பெற்ற இந்திய கணிதவியலாளர் மற்றும் வானசாஸ்திரியுமான ஆர்யபட்டாவின் மார்பளவு வெண்கல சிலையை மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஸ்மிருதி இராணி திறந்துவைத்துள்ளார்.

# கிராமப்புற மாணவர்களுக்கும் தரமான கல்வியை வழங்கும் நோக்கில் ஒடிஸா மாநில அரசு CBSE அமைப்புடன் இணைந்து ஆதர்ஷ் வித்யாலயா திட்டத்தை துவக்கியுள்ளது.

# இந்தியா பாகிஸ்தான் எல்லையில் பாதுகாப்பை பலப்படுத்துவது பற்றிய பரிந்துரைகளை வழங்குவதற்கு மத்திய உள்துறை அமைச்சகம் முன்னாள் உள்துறை செயலாளர் மதுக்கர் குப்தா தலைமையில் குழு ஒன்றை நியமனம் செய்துள்ளது.

# முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் எழுதி வெளியிட்டுள்ள புத்தகம் "Standing Guard — A year in Opposition"

# பெண் குழந்தைகளை கருவிலே அழிப்பது மற்றும் பிறந்தபின் கொலை செய்வது ஆகியவற்றை தடுப்பதற்காக ராஜஸ்தான் மாநில அரசு ASHRAY என்னும் திட்டத்தை துவக்கியுள்ளது.(தமிழகத்தில் உள்ள தொட்டில் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம் போன்றது)

# First North East - ASEAN (Association of Southeast Asian Nations) Business Summit ஏப்ரல் 07 மற்றும் 08 தேதிகளில் மணிப்பூர் தலைநகர் இம்பாலில் நடைபெற்று முடிந்துள்ளது.

# Central Administrative Tribunal (CAT)ன் சேர்மனாக சிக்கிம் மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவிவகித்து ஓய்வு பெற்றுள்ள நீதியரசர் பிரமோத் கோலி ( Permod Kohli ) பதவியேற்றுள்ளார்.

Wheels Behind the Veil - Pms, Cms and Beyond

# எழுதியவர் - நரசிம்ம ராவ் பிரதமராக பதவிவகித்த பொழுது, மத்திய அரசின் செய்தி துறை ஆலோசகராக பணியாற்றிய P.V.R.K. பிரசாத்

# பத்திரிகைகளில் அரசின் திட்டங்கள் / சாதனைகள் பற்றிய விளம்பரங்களை வெளியிடுவதற்குரிய வழிகாட்டி நெறிமுறைகளை உருவாக்குவதற்கு, மத்திய செய்தி மற்றும் ஒளிபரப்பு துறை அமைச்சகம் முன்னாள் தலைமை தேர்தல் ஆணையாளர் B.B. தாண்டன் தலைமையில் குழு ஒன்றை நியமனம் செய்துள்ளது.
குழுவின் உறுப்பினர்களாக ரஜத் சர்மா மற்றும் பியூஷ் பாண்டே ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

# பிரிட்டனின் மிக உயரிய ‘பவுண்ட்டர்ஸ்’ விருது அன்னை தெரசாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

# சௌதி அரேபியா மற்றும் எகிப்து நாடுகளை இணைக்கும் வகையில் செங்கடலின் ( Red Sea ) மீது பாலம் அமைக்க இரு நாடுகளுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

# அரசியல் சட்ட மாமேதை, அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 125வது பிறந்தநாளை ஐ.நா.அமைப்பு அதன் தலைமையகத்தில் ஏப்ரல் 13 அன்று கொண்டாடி உள்ளது.
.( அண்ணல் அம்பேத்கரின் பிறந்தநாள் - ஏப்ரல் 14 )

# மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகம் வழங்கும் தேசிய அறிவுசார் சொத்துரிமை விருதை ( National Intelectual Property Award ) காரக்பூர் IIT பெற்றுள்ளது.
ஏப்ரல் - 26 உலக அறிவுசார் சொத்துரிமை தினம்

# பாகிஸ்தான் மற்றும் சீன விமானப்படைகள் இணைந்து மேற்கொள்ளும் போர் பயிற்சிகள் SHAHEEN - 5 அல்லது EAGLE - 5 ஏப்ரல் 09 முதல் பாகிஸ்தானில் நடைபெற்று வருகின்றது

# அசர்பைஜான் நாட்டைச்சேர்ந்த புலனாய்வு செய்தியாளர் Khadija Ismayilova வுக்கு 2016ம் ஆண்டுக்கான UNESCO / Guillermo Cano World Press Freedom Prize அறிவிக்கப்பட்டுள்ளது.

# காவல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையின் { Bureau of Police Research & Development (BPR&D)} டைரக்டர் ஜெனெரலாக Ms. Meeran C.Borwankar IPS நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

# G - 7 நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களின் மாநாடு ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் ஏப்ரல் 10 மற்றும் 11ல் நடைபெற்று முடிந்துள்ளது.
இந்த மாநாட்டின் முடிவில் ஹிரோஷிமா பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது.
"Commitment to seeking a safer world for all and to creating the conditions for a world without nuclear weapons."

# புலிகளை காப்பது பற்றிய ஆசிய நாடுகளின் அமைச்சர்கள் அளவிலான 3வது மாநாடு ( 3rd Asia Ministerial Conference on Tiger Conservation ) டெல்லியில் ஏப்ரல் 12 முதல் 14வரை நடைபெறுகிறது.

# India’s War : The Making of Modern South Asia 1939 – 1945 எழுதியவர் - ஸ்ரீநாத் ராகவன்

# வாரணாசியைச்சேர்ந்த கதக் நடனக்கலைஞர் சோனி சௌராஸியா, தொடர்ந்து 123 மணி 20 நிமிடங்கள் நடனமாடி கின்னஸ் சாதனை புரிந்துள்ளார்.

# A State in Denial – Pakistan’s Misguided and Dangerous Crusade? எழுதியவர் -- B.G. வர்கீஸ்

# முதலாவது தேசிய பழங்குடியினர் திருவிழா ( First National Tribal Carnival ) டெல்லியில் ஏப்ரல் 29 முதல் மே 02 வரை நடைபெறுகிறது.

# 2016 Water Film Festival டெல்லியில் ஏப்ரல் 06 அன்று நடைபெற்று முடிந்துள்ளது.

# 2014ம் ஆண்டுக்கான தேசிய புவிஅறிவியல் விருது ( National Geo Science Award ) பேராசிரியர். அசோக் குமார் சிங்விக்கு வழங்கப்பட்டுள்ளது.

# டெல்லிக்கு மிக அருகில், ஹரியானா மாநிலத்தில் அமைந்துள்ள தொழில் நகரமான ' குர்கான்' ( Gurgaon ) இனி " குருகிராம் " ( Gurugram ) என பெயர் மாற்றம் செய்யப்படுவதாக அம்மாநில முதல்வர் மனோகர்லால் கட்டார் அறிவித்துள்ளார்.

# பிரபல ஹிந்தி நடிகர் அஜய் தேவகன் மற்றும் அவரது மனைவி கஜோல் ஆகியோரை ஆந்திர மாநில சுற்றுலாத்துறையின் விளம்பர தூதுவர்களாக அம்மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு நியமனம் செய்துள்ளார்.

# 2015ம் ஆண்டுக்கான " சரஸ்வதி சம்மான் " விருது டோக்ரி மொழி கவிஞர் மற்றும் நாவலாசிரியருமான திருமதி. பத்மா சச்தேவ்க்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
2007ம் ஆண்டு Chitt - Chete என்ற பெயரில் வெளிவந்துள்ள இவரின் சுயசரிதை நூலுக்கு இந்த பரிசு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
2014ம் ஆண்டு கர்நாடகாவை சேர்ந்த வீரப்ப மொய்லிக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

Standing On An Apple Box
# இந்த புத்தகத்தை எழுதியவர் - ரஜினிகாந்த்தின் மகளும், தனுஸ்ன் மனைவியுமான ஐஸ்வர்யா தனுஷ்

# மகாராஷ்டிரா மாநிலத்தில் கடுமையான குடிநீர் பஞ்சம் ஏற்பட்டுள்ள லத்தூர் பகுதிக்கு ராஜஸ்தான் மாநிலம், கோட்டா ( KOTA ) நகருக்கு அருகில் உள்ள மிராஜ் ( MIRAJ ) என்ற பகுதியில் இருந்து ரயில் மூலம் குடிநீர் ( 5 லட்சம் லிட்டர் ) கொண்டு செல்லப்படுகிறது. குடிநீர் கொண்டு செல்லும் ரயிலுக்கு " ஜல் தூத் " ( JALDOOT ) என பெயரிடப்பட்டுள்ளது.

# பசுபிக் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள The Republic of Nauru என்ற நாடு சர்வதேச நிதி செலாவணியம் ( International Monetary Fund -IMF ) மற்றும் உலகவங்கி ஆகியவற்றில் 189வது நாடாக இணைந்துள்ளது.

# நேபாள நாட்டின் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக, முதன்முறையாக சுசிலா கார்கி என்ற பெண்மணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

# கங்கை நதியை தூய்மை படுத்தும் திட்டத்திற்காக இந்தியாவுக்கும் ஜெர்மனிக்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

# கஜகஸ்தானின் அஸ்டானா நகரில் மே 19 முதல் 27ஆம் தேதி வரையில் நடைபெறவுள்ள மகளிர் குத்துச் சண்டை உலக சாம்பியன்ஷிப் போட்டிக்கான 8 தூதர்களில் ஒருவராக இந்திய குத்துச் சண்டை வீராங்கனை மேரி கோம் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேரி கோம் தவிர, பிரிட்டனின் நிகோலா ஆடம்ஸ், அமெரிக்காவின் மர்லேன் எஸ்பார்ஸா, பிரேஸிலின் அட்ரியானா அரௌஜா, பல்கேரியாவின் ஸ்டானிமிரா பெட்ரோவா, மொராக்கோவின் காதிஜா மார்டி, அல்ஜீரியாவின் கெய்ரா சிக்கி யாகுப், கனடாவின் ஜெனிஃபர் ஹக்கின்ஸ் ஆகியோர் மகளிர் குத்துச் சண்டை உலக சாம்பியன்ஷிப் போட்டிக்கான தூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

டிரான் & சனாஃபிர் தீவுகள்

# செங்கடலில் சவூதி அரேபியாவுக்குச் சொந்தமான டிரான், சனாஃபிர் ஆகிய தீவுகளை இஸ்ரேல் ஆக்கிரமிக்காமல் பாதுகாப்பதற்காக, அந்தத் தீவுகளின் கட்டுப்பாட்டை எகிப்து 1950-ஆம் ஆண்டு கேட்டுப் பெற்றது. எனினும், 1967-ஆம் ஆண்டு மேற்காசியப் போரில் அந்தத் தீவுகளை இஸ்ரேலிடம் எகிப்து இழந்தது. இருப்பினும், 1979-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அமைதி ஒப்பந்தத்தின்கீழ் அந்தத் தீவுகளை எகிப்திடம் இஸ்ரேல் திரும்ப ஒப்படைத்தது.
அதனைத் தொடர்ந்து அந்தத் தீவுகளை எகிப்து தொடர்ந்து தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்ததால் அந்த நாட்டுக்கும், சவூதி அரேபியாவுக்கும் இடையே இது தொடர்பாக சர்ச்சை நிலவி வந்தது. இந்தச் சூழலில் இரு நாட்டு உறவை மேம்படுத்தும் வகையில், சர்ச்சைக்குரிய அந்தத் தீவுகளை மீண்டும் சவூதி அரேபியாவிடம் ஒப்படைக்க முடிவு செய்துள்ளதாக எகிப்து அறிவித்துள்ளது.

# கடும் நோயால் பாதிக்கப்படுவோர், வயது முதிர்ந்த நிலையில் அவதிப்படுவோர் கருணை அடிப்படையில் மருத்துவரின் உதவியோடு தற்கொலை செய்து கொள்ள அனுமதி வழங்கும் சட்ட மசோதாவுக்கு கனடா நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்த சட்டம் வரும் ஜூன் மாதம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும், இந்த புதிய சட்டம் கனடா நாட்டு குடிமக்களுக்கு மட்டுமே பொருந்தும் என்றும், வெளிநாட்டினருக்கு பொருந்தாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
கருணை தற்கொலை --- நோயாளியின் விருப்பத்தின் பேரில், மருத்துவரின் உதவியோடு செய்யப்படுவது.
கருணை கொலை -- சுய நினைவு இல்லாத, நோயாளியின் விருப்பத்தை பெற இயலாத நிலையில், பராமரிப்பளர்களின் வேண்டுகோளை ஏற்று மருத்துவரின் உதவியோடு செய்யப்படுவது.

# கடல்சார் இந்தியா மாநாடு ( Maritime India Summit) - 2016
ஏப்ரல் 14 முதல் 16 வரை மும்பையில் நடைபெற்று முடிந்துள்ளது

# டெல்லியில் பான்மசாலா, குட்கா உள்ளிட்ட அனைத்து வகையிலான புகையிலை பொருட்களுக்கு ஓராண்டு டெல்லி அரசு தடை விதித்துள்ளது

# மலேசியாவில் நடைபெற்ற 25வது சுல்தான் அஸ்லான் ஷா கோப்பை ஹாக்கி இறுதிப்போட்டியில் இந்தியாவை தோற்கடித்து ஆஸ்திரேலியா 9வது முறையாக சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.

# ஓய்வு பெற்ற ஏர் மார்ஷல் அர்ஜன் சிங்கை ( Arjan Singh ) கவுரவிக்கும் விதமாக மேற்கு வங்காளத்தில் உள்ள பனகார் ( Panagarh ) விமானப்படை தளம், அர்ஜன் சிங் விமானப்படை தளம் என பெயர் மாற்றம் செய்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது

# National Monument Authorityயின் தலைவராக திருமதி. சுஷ்மிதா பாண்டே நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

Shatrujeet

# ராஜஸ்தானின் தார் பாலைவனத்தில் ( ஜைசல்மார் நகருக்கு அருகில் ) இந்திய ராணுவம் Shatrujeet என்ற பெயரில் தயார்நிலை பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றது. இந்த பயிற்சியில் மதுராவை தலைமையிடமாக கொண்ட படையணியின் சார்பில் சுமார் 30,000 வீரர்கள் பங்குபெற்றுள்ளனர்.

# ஜார்கண்ட் மாநில ' அரசு அரசியல் சட்ட மாமேதை' அம்பேத்கரின் 125வது பிறந்தநாளை முன்னிட்டு 80கோடி செலவில் 11,000 விதவைப் பெண்களுக்கு வீடு கட்டுவதற்கு நிதியுதவி வழங்கும் வகையில் " பீமாராவ் அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா " என்னும் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.
இத்திட்டத்தின் படி மலைபகுதியில் வீடு கட்டுபவர்களுக்கு ரூ.75000 /ம், தரைபகுதியில் வீடு கட்டுபவர்களுக்கு ரூ.70000/ம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# சிக்கிமில் உள்ள National Institute of Technologyயில் பரம் கஞ்சன்சுங்கா ( PARAM KANCHENJUNGA ) என்னும் சூப்பர் கம்ப்யூட்டர் நிறுவப்பட்டுள்ளது.

# ஷேக்ஸ்பியர் மரணம் எய்து 400 ஆண்டுகள் ஆனதையொட்டி பிரிட்டன் தபால்துறை நினைவு தபால்தலை வெளியிட்டுள்ளது.

PASSEX – 2016

# இந்திய கடற்படைக்குச் சொந்தமான இரு போர்க் கப்பல்களான "தீர்', "சுஜாதா' மற்றும் இந்திய கடலோர காவல் படை கண்காணிப்புக் கப்பல் "வருணா' ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள முதலாவது பயிற்சி அணி வீரர்களுக்கு இலங்கை கடல் பகுதியில் ஏப்ரல் 19 முதல் 24 வாரங்களுக்கு பயிற்சி அளிக்கப்பட இருக்கின்றது. இந்த பயிற்சிக்கு PASSEX - 2016 என பெயரிடப்பட்டுள்ளது.

இது தவிர பயிற்சிக்காக இந்தியாவில் உருவாக்கப்பட்டு கடந்த ஜனவரி முதல் கொழும்பு கடற்படை தளத்தில் நிறுத்தப்பட்டுள்ள "தரங்கினி', "சுதர்ஷினி' ஆகிய இரு கப்பல்களும் போர்ப் பயிற்சியில் ஈடுபடுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திரா காந்தி தேசிய கலைகள் மைய அறக்கட்டளையின் புதிய தலைவராக, "ஜனசத்தா' ஹிந்தி நாளிதழின் முன்னாள் செய்தி ஆசிரியர் ராம் பகதூர் ராய் நியமிக்கப்பட்டுள்ளார்.
இந்திரா காந்தி தேசிய கலைகள் மையத்தின் அறக்கட்டளை உறுப்பினராக தமிழகத்தைச் சேர்ந்த மூத்த நடனக் கலைஞர் பத்மா சுப்பிரமணியம் உள்ளிட்ட 19பேர் நியமிக்கப்பட்டுள்ளார்.

# இந்திய தடகள சம்மேளனத்தின் ( Athletics Federation of India ) தலைவராக இரண்டாவது முறையாக அதில்லே சுமரிவள்ள ( Adille Sumariwalla ) தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

South Asia Wildlife Enforcement Network ( SAWEN )

# எல்லை தாண்டி வனவிலங்குகள் வேட்டையாடுவதை தடுக்க, South Asia Wildlife Enforcement Network ( SAWEN ) அமைப்பில் இந்தியா உறுப்பினராக இணைந்துள்ளது. இதில் ஏற்கனவே மாலத்தீவுகள், இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாள், பூட்டன், ஆப்கானிஸ்தான் ஆகியவை உறுப்பு நாடுகளாக உள்ளன.

# சர்வதேச மூங்கில் மாநாடு ( Global Bamboo Summit ) மத்திய பிரதேச மாநிலம், இந்தூரில் ஏப்ரல் 08 முதல் 10வரை நடைபெற்று முடிந்துள்ளது.

# இந்தியாவின் புகழ்பெற்ற பைக் ரேஸ் பெண் ' வீனு பாலிவால் ' ஏப்ரல் 11 அன்று மத்திய பிரதேச மாநிலம், விதிஷா மாவட்டம், Gyaraspurல் நடைபெற்ற சாலை விபத்தில் உயிரிழந்தார்.

# IEC திட்டத்தின் தூதுவராக பிரபல ஹிந்தி நடிகர் அமிதாப்பச்சன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

*************************

தினமும் " நடப்பு நிகழ்வுகள் " செய்திகளை அறிந்து கொள்ள

Current Affairs for Competitive Exams ( https://www.facebook.com/Current-Affairs-for-Competitive-Exams-1463823397253925/ )
என்ற முகநூல் முகவரியில் பார்வையிடுங்கள்.

*************************

# தேசிய குடும்பக்கட்டுப்பாடு உச்சி மாநாடு ( The National Summit on Family Planning ) டெல்லியில் ஏப்ரல் 04 மற்றும் 05 தேதிகளில் நடைபெற்று முடிந்துள்ளது.
மாநாட்டின் கருப்பொருள் ( Theme ) - - New Choices, New Horizons.
குடும்ப கட்டுப்பாடு பற்றி தகவல், கல்வி, பரப்புதல் என்னும் முழுமையான திட்டத்தை ( A 360 degree information, education and communication (IEC) plan ) செயல்படுத்த இம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# ஐ.நா.,வின் தொழில்துறை வளர்ச்சி அமைப்பு (UNIDO) , உலகின் பெரிய உற்பத்தியாளர்கள் பட்டியலில் இந்தியாவுக்கு 6வது இடம் அளித்துள்ளது. இதற்கு முன்னர், இந்தியா 9வது இடத்தில் இருந்தது.
10 நாடுகள் அடங்கிய இந்த பட்டியலில் சீனா முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்த இடத்தில் அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி, கொரியா உள்ளது. இந்தோனேஷியா கடைசி இடத்தில் உள்ளது.

# பாகிஸ்தான் ஏப்ரல் 09ம் தேதி கப்பல்களை தாக்கும் வலிமையுள்ள ZARB ஏவுகணையை வெற்றிகரமாக பரிசோதனை செய்துள்ளது.

# சீனாவின்Shenzhen நகரில் நடைபெற்ற Global Analyst Summit 2016ல் வெளியிடப்பட்ட சர்வதேச இணைப்பு குறியீடு ( Global Connectivity Index ) பட்டியலில் இந்தியா 44வது இடத்தில் இடம்பெற்றுள்ளது.
அமெரிக்கா முதலிடம் பெற்றுள்ளது.சிங்கப்பூர் மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் 2 மற்றும் 3வது இடத்தில உள்ளன.

# கவுஹாத்தியை சேர்ந்த பிரியதர்ஷினி சட்டர்ஜி என்ற பெண் 2016ம் ஆண்டின் மிஸ் இந்தியாவாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
இதற்கு அடுத்தடுத்த இடங்களில் மும்பையை சேர்ந்த சுஷ்ருதி கிருஷ்ணா மற்றும் உத்திரபிரதேசத்தை சேர்ந்த பங்குரி கித்வானி ஆகியோர் இடம்பெற்றனர்.
இந்த வெற்றியின் மூலம் பிரியதர்ஷினி சட்டர்ஜி 2016ம் ஆண்டின் உலக அழகி போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

# கம்போடியா நாட்டின் வனப்பகுதியில் புலிகள் இனம் அனைத்தும் அழிந்துவிட்டதாக புலிகள் பாதுகாப்பு குழு அறிவித்துள்ளது.

# முதன்முறையாக இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட பெண்களுக்கான கருத்தடை உறையை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் அறிமுகம் செய்துள்ளார். Velvet என்ற வணிகப்பெயரில் வெளிவந்துள்ளது.

# ஹெவ்லட் - பெக்கார்ட் (HP) நிறுவனம், ஸ்பெக்டர் 13 என்ற புதியவகை மடிக்கணினியை அறிமுகப்படுத்தியுள்ளது

இந்த மடிக்கணினி 10.4 மில்லிமீட்டர் தடிமன் மற்றும் 1.1 கிலோ எடையையும் கொண்டு உலகின் மெல்லிய மடிக்கணினி என பெயர் பெற்றுள்ளது.

# கொசுக்கடியால் ஏற்படும் டெங்கு காய்ச்சலை தடுக்கும் வகையில் பிரெஞ்ச்சின் டென்வாக்ஸீயா (உலகின் முதல் டெங்கு காய்ச்சல் தடுப்பூசி) மருந்தை, பொது டெங்கு தடுப்பூசி திட்டத்தின் கீழ் பிலிப்பைன்ஸ் அரசு ஏப்ரல் 04ல் அறிமுகப்படுத்தியுள்ளது.

டென்வாக்ஸியாவை ( Dengvaxia.) டெங்கு தடுப்பூசியாக பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உலகில் முதன் முதலில் அறிமுகப்படுத்திய நாடு மெக்சிகோ மற்றும் ஆசியா கண்டத்தில் முதல் முறையாக இத்தடுப்பூசியை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்துள்ள நாடு பிலிப்பைன்ஸ் ஆகும்.

# ஒலிம்பிக் ஜிம்னாஸ்டிக்கில் விளையாட தகுதி பெற்ற முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமையை திரிபுரா மாநிலத்தைச் சேர்ந்த ஜிம்னாஸ்டிக் வீராங்கனை தீபா கர்மாகர் அடைந்துள்ளார்.
இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் இதுவரை ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் ஜிம்னாஸ்டிக் பிரிவில் 11 ஆண்கள் பங்கேற்றுள்ளனர் (1952-ல் இருவர், 1956-ல் மூவர், 1964-ல் 6 பேர்). ஆனால், இப்போதுதான் முதன்முறையாக பெண் ஒருவர் இந்தியா சார்பில் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

# விளையாட்டுப் போட்டிகளில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கு ஆண்டுதோறும் லாரியஸ் உலக விளையாட்டு விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது
உலகின் நம்பர் ஒன் டென்னிஸ் வீரரான செர்பியாவின் ஜோகோவிக் சிறந்த வீரருக்கான விருதை 3வது முறையாக பெற்றார்.
மகளிர் பிரிவில் சிறந்த வீராங்கனையாக அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் 3வது முறையாக பெற்றார்.
அமெரிக்காவை சேர்ந்த கோல்ப் வீரர் ஜோர்டான் ஸ்பைத் திருப்புமுனையை ஏற்படுத்திய வீரர் என்ற விருதை வென்றார்.
சிறந்த அணிக்கான விருதை நியூஸிலாந்து ரக்பி அணி வென்றது. அந்த அணியின் டன் கார்ட்டர் மீண்டு வந்த வீரருக்கான விருதை கைப்பற்றினார்.
பார்முலா ஒன் கார் பந்தயத்தில் 3 முறை சாம்பியன் பட்டம் வென்ற முன்னாள் வீரர் நிக்கி லாடாவுக்கு வாழ்நாள் சாதனையாளார் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது. 67 வயதான லாடா ஆஸ்திரியா நாட்டை சேர்ந்தவர். 1975, 1977, 1984 ஆகிய ஆண்டுகளில் பார்முலா ஒன் கார்பந்தயத்தில் சாம்பியன் பட்டம் வென்றிருந்தார்.
நேர்மையான வீரர் விருதுக்கு மறைந்த நெதர்லாந்து கால்பந்து வீரர் ஜோஹன் கிரைப் தேர்வானார். புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர் கடந்த மாதம் மரணமடைந்தார். இந்த விருதை அவரது மகன் ஜோர்டி பெற்றுக்கொண்டார்.
சிறந்த மாற்றுத்திறனாளி வீரருக்கான விருதை பிரேசில் நாட்டை சேர்ந்த நீச்சல் வீரர்

டேனியல் டயஸூம், சிறந்த அதிரடி வீரர் விருதை ஜெர்மனியை சேர்ந்த டிரையத்லான் வீரர் ஜன் போர்டெனனோவும் பெற்றனர்.

# மலேரியா மற்றும் கொசுவினால் ஏற்படும் நோய்களில் இருந்து முற்றிலும் விடுபட்ட பகுதியாக ஐரோப்பாவை உலக சுகாதார அமைப்பு ( WHO) அறிவித்துள்ளது.

# உலக பத்திரிகை சுதந்திர குறியீட்டு எண் { World Press Freedom Index (WPFI) }
180 நாடுகளில் எடுக்கப்பட்ட சர்வேயில் இந்தியா 133வது இடம் பிடித்துள்ளது.( கடந்த ஆண்டு 136வது இடம் !)
பின்லாந்து, நெதர்லாந்து, நார்வே ஆகிய நாடுகள் முதல் மூன்று இடத்தில உள்ளன.
பூட்டன் - 94, நேபாள் - 105, ஆப்கானிஸ்தான் - 120, ஸ்ரீலங்கா - 141, பங்களாதேஷ் - 144, பாகிஸ்தான் - 147, சீனா - 176வது இடங்களில் உள்ளன.

# கோவா மாநில லோக் ஆயுக்தா நீதிபதியாக, பாட்னா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்றுள்ள நீதியரசர் P.K. மிஸ்ரா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

# ஹிமாச்சல பிரதேசத்தை சேர்ந்த துர்கா தாகுர் ஐ சர்வதேச ஹாக்கி போட்டிகளுக்கான நடுவராக நியமித்து சர்வதேச ஹாக்கி சம்மேளனம் உத்தரவிட்டுள்ளது.

# ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா வெளியுறவுத்துறை அமைச்சர்கள் அமைப்பின் { Foreign Ministers of the Russia, India and China (RIC) Forum) 14வது மாநாடு மாஸ்கோவில் ஏப்ரல் 19ல் நடைபெற்றுள்ளது.

# முதுபெரும் சுதந்திரப்போராட்ட வீரர் Tatya Tope என்று அழைக்கப்படும் Ramachandra Pandurang Topeன் தியாகத்தை போற்றும் வகையில் மத்திய அரசு ரூ.200 மற்றும் ரூ.10 மதிப்பிலான நாணயங்களை வெளியிட்டுள்ளது.

# AN UNDOCUMENTED WONDER - THE MAKING OF THE GREAT INDIAN ELECTION
இந்த புத்தகத்தை எழுதியவர் - முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் திரு. S.Y. குரேஷி

# இஸ்ரோ விஞ்ஞானிகள், இதய மாற்று அறுவை சிகிச்சை நோயாளிகளுக்கு உதவும் வகையில், இதயத்துக்கு ரத்தத்தை செலுத்தும் புதிய கருவியை (பம்ப்) கண்டுபிடித்துள்ளனர். இந்த கருவி 100 கிராம் எடை கொண்டது.

இஸ்ரோ தயாரிக்கும் ராக்கெட்டுகளுக்கு டைட்டானியம் என்ற உலோகம் பயன்படுத்தப்படுகிறது. அந்த உலோகத்தில் இருந்து இந்த பம்ப் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த பம்ப் ஒரு நிமிடத்தில் 3 முதல் 5 லிட்டர் ரத்தத்தை இதயத்துக்கு செலுத்தும் திறன் கொண்டது.
வெளிநாட்டு செயற்கை இதயங்கள் ஒரு கோடி ரூபாய்க்கும்மேல் விற்கப்படும் போது,

இஸ்ரோ விஞ்ஞானிகள் கண்டுபிடித் துள்ள இந்த பம்ப் ரூ.1.25 லட்சம்தான் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த பம்ப் சமீபத்தில் திருவனந்தபுரத்தில் உள்ள மருத்துவமனையில் 5 பன்றிகளுக்கு பொருத்தி சோதனை செய்து பார்க்கப்பட்டது. அந்த சோதனை வெற்றி பெற்றுள்ளது.

# டெல்லியில் நடைபெற்ற 10வது சிவில் சர்விசஸ் தின விழாவில் சிவில் சர்விசஸ் விருதுகளை பிரதமர் மோடி வழங்கினார்.
ஜன் தன் யோஜனா விருது - சண்டிகர்
தூய்மை இந்தியா திட்ட விருது - பிகானீர் மற்றும் சிக்கிம்
Soil health scheme award - பல்ராம்பூர் மாவட்டம் , சத்தீஸ்கர்
Soil health programme award - ஹமிர்பூர், ஹிமச்சலபிரதேஸ்
மேலும் இந்த விழாவில் The Change Makers ., Transforming India., மற்றும் Recreating Excellence என்னும் மூன்று புத்தகங்களை வெளியிட்டுள்ளார்.

# ஏப்ரல் - 22 ...... 46வது புவி நாள்
1970ம் ஆண்டு முதல் ஏப்ரல் - 22ம் தேதி புவி நாளாக கடைபிடிக்கப்படுகிறது.
கூடுதல் தகவல்கள்
ஒவ்வோர் ஆண்டும் மார்ச் மாதம் மூன்றாவது சனிக்கிழமை இரவு 08-30 மணி முதல் 09-30மணி வரை புவி நேரம் கடைபிடிக்கப்படுகிறது.
ஜூன் - 05 உலக சுற்றுச்சூழல் நாள்.

# மகாராஷ்டிரா மாநிலத்தில் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மராத்வாடா பகுதியில் தால் மற்றும் கோரகோவ் என்னும் இரு கிராமங்களை தத்தெடுப்பதாக பிரபல நடிகர் அமீர்கான் அறிவித்துள்ளார்.
அமீர் கான் மற்றும் அவரது மனைவி கிரண் ராவ் இணைந்து பாணி பவுண்டேசன் என்னும் தொண்டு நிறுவனத்தை நடத்தி வருகினறனர்.
மகாராஸ்டிரா மாநிலத்தில் மொத்தமுள்ள 43,000 கிராமங்களில் 27,723 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.

# 2016, மார்ச் மாத இறுதி வரையில் மொத்தமுள்ள 15.34 கோடி எரிவாயு இணைப்பு பெற்றவர்களில் 1,00,06,303 பேர் எரிவாயுக்கான மானியத்தை திருப்பியளித்துள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. இதில் மகாராஸ்டிரா, உத்திரபிரதேசம், டெல்லி. கர்நாடாக, தமிழ்நாடு ஆகியவை முதல் 5 இடங்களில் உள்ளன.

# மத்திய அரசின் பரிந்துரையை ஏற்று பாஜகவைச்சேர்ந்த சுப்பிரமணியன் சுவாமி, மலையாள நடிகர் சுரேஷ் கோபி, கிரிக்கெட் வீரர் நவ்ஜோத் சிங் சித்து, குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோம், மூத்த பத்திரிகையாளர் ஸ்வபன் தாஸ் குப்தா, தேசிய ஆலோசனை கவுன்சில் முன்னாள் உறுப்பினர் நரேந்திர ஜாதவ் ஆகியோரை குடியரசுத்

தலைவர் பிரணாப் முகர்ஜி, மாநிலங்களவை எம்.பி.க்களாக நியமித்து உத்தரவு பிறப்பித்துள்ளார்.

# ஏப்ரல் - 22 புவி நாளன்று, பாரீஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் இந்தியா உட்பட 175 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

புவி வெப்பநிலை உயர்வை 2 டிகிரி செல்சியஸுக்கு மிகாமல் கட்டுப்படுத்த வேண்டும் என்பதே இந்த ஒப்பந்தத்தின் இலக்கு. சவுதி அரேபியா, ஈராக், நைஜீரியா, கஜகஸ்தான் உள்ளிட்ட எண்ணெய் வளம் மிகுந்த நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை.

கூடுதல் தகவல் :

பருவநிலை அமைதிக்கான ஐ.நா. தூதுவர் -- ஹாலிவுட் நடிகர் லியானார்டோ டி காப்ரியோ

# இந்த ஆண்டு ரியோ டி ஜெனிரோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கு, இந்தியாவுக்கான நல்லெண்ண தூதராக ஹிந்தி நடிகர் சல்மான் கானை இந்திய ஒலிம்பிக் சங்கம் நியமனம் செய்துள்ளது.

# 11th Exercise Nomadic Elephant – 2016 .இந்தியா மற்றும் மங்கோலியா இணைந்து மேற்கொள்ளும் 11வது ராணுவ பயிற்சி Exercise Nomadic Elephant - 2016 ஏப்ரல் 25 முதல் மே 08 வரை மங்கோலியாவில் நடைபெறுகிறது

# ஐ.நா. பல்கலைக்கழக கவுன்சிலுக்கு டெல்லியைச் சேர்ந்த சிந்தனையாளர் அமைப்பான, டெல்லி கொள்கைக் குழுவின் இயக்குநரும் கல்வியாளருமான திருமதி.ராதா குமார் உட்பட 12 பேரை, ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் நியமனம் செய்துள்ளார்.

இந்தியரான ராதா குமார், இன மோதல் பிரச்சினைக்கு தீர்வு காண்பது, அமைதியை நிலைநாட்டுவது ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றவர். ஜாமியா மில்லியா இஸ்லாமியா பல்கலைக்கழகத்தின் அமைதி மற்றும் மோதல் தொடர்பான ஆய்வுகளுக்கான மண்டேலா மையத்தின் இயக்குநராக இவர் பணியாற்றி உள்ளார்.

# டிஎன்ஏ (மரபணு) வடிவமைப்பை பயன்படுத்தி உலகின் மிக நுண்ணிய தெர்மாமீட்டரை (வெப்பமானியை) கனடாவின் மான்ட்ரியல் பல்கலைக்கழக பயோ வேதியியல் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

# சீனாவில் பயங்கரவாதி என்று குற்றம்சாட்டப்பட்ட சர்வதேச உய்குர் கூட்டமைப்புத் தலைவர் துல்குன் இசாவுக்கு இந்தியா வழங்கிய நுழைவு இசைவு (விசா) ரத்து செய்துள்ளது.

அண்மையில் பாகிஸ்தான் பயங்கரவாதி மசூத் அஸாருக்கு எதிராக ஐ.நா.வில் இந்தியா கொண்டு வந்த தீர்மானத்தை சீனா முறியடித்தது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில்

சீனாவால் பயங்கரவாதி என்று குற்றம்சாட்டப்படும் உய்குர் முஸ்லிம் தலைவருக்கு இந்தியா நுழைவு இசைவு வழங்கியது. இதற்கு, சீனா கடும் கண்டனம் தெரிவித்ததாலும், இன்டர்போல் பட்டியலில், துல்குன் இசா தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டிருப்பதாலும், இந்தியா இந்த முடிவை எடுத்துள்ளது.

# 2016-ம் ஆண்டுக்கான 9-வது மாஸ்கோ மணல் சிற்ப போட்டி ஏப்ரல் 21 முதல் 27 வரை நடைபெற்றது. இதில், மகாத்மா காந்தியின் படத்தை 15 அடி உயரத்தில் அகிம்சை மற்றும் சமாதான செய்தியைச் சித்தரிக்கும் வகையில் உலக அமைதி என்று மணலில் வடிவமைத்து, இந்தாண்டுக்கான தங்கப்பதக்கத்தை வென்று சுதர்சன் பட்நாயக் சாதனை படைத்துள்ளார்

# இந்தியாவின் பிரத்யேக வழிகாட்டி செயற்கைக்கோளான IRNSS - 1G வெற்றிகரமாக PSLV - C33 ராக்கெட் மூலம் ஏப்ரல் 28ல் விண்ணில் நிலை நிறுத்தப்பட்டது.

இந்தச் செயற்கைக்கோள்கள் கடல் வழி ஆராய்ச்சிக்காகவும், இயற்கை பேரிடர் காலங்களில் கடல் பயணத்துக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மேலும், 1,500 சதுர கிலோ மீட்டர் சுற்றளவு பரப்பளவுக்கு கடல் வழிகளையும், கடல் எல்லைகளையும் கண்காணிக்கும், மேலும், தரையிலும், வான்வெளியிலும் செல்லும் அனைத்து வாகனங்களையும் கண்காணிக்க முடியும்.
கார்கள், சரக்கு வாகனங்கள், விமானங்கள், கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் இருப்பதைத் துல்லியமாகத் தெரிவிப்பதுடன், பயண நேரம் குறித்துச் சரியான தகவல்களையும் அளிக்கும். மேலும், பேரிடர் மேலாண்மை, செல்லிடப்பேசிகள் ஒருங்கிணைப்பு, புவியியல் வரைபடங்களைக் கண்காணித்தல், கார், கனரக வாகன ("டிரக்ஸ்') ஓட்டுநர்களுக்கு குரல்வழி மூலம் முறையாக ஓட்டச்சொல்லி வாகனங்களை இயக்க வழிகாட்டும். இது இந்தியாவுக்கான பிரத்யேக வழிகாட்டி செயற்கைக்கோள்.
அமெரிக்காவின் GPS போல இந்தியாவுக்கான GPS. வழிகாட்டியாக இந்தச் செயற்கைக்கோள்கள் அமையும்.

2013-ஆம் ஆண்டு ஜூலை 1-ஆம் தேதி IRNSS -1A செயற்கைக்கோள் PSLV -C22 ராக்கெட்டிலும், 2015-ஆம் ஆண்டு ஏப்ரல் 4-ஆம் தேதி IRNSS - 1B செயற்கைக்கோள் PSLV- C24 ராக்கெட்டிலும், அக்டோபர் மாதம் 16-ஆம் தேதி IRNSS -1C, மார்ச் 28-ஆம் தேதி IRNSS -1D செயற்கைக்கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டன.
2016, ஜனவரி 20-ஆம் தேதி IRNSS -1E செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. மார்ச் 10-ஆம் தேதி ஆறாவது செயற்கைக்கோளான IRNSS -1F விண்ணில்

நிலை நிறுத்தப்பட்டது. 7 செயற்கைக்கோள்களை உள்ளடக்கிய இந்த திட்டத்துக்கு 'நாவிக்' என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

# புலம் பெயர்ந்த திபெத்தியர்களின் பிரதமராக இரண்டாவது முறையாக லப்சங் சங்கி ( Lobsang Sangey ) தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர்களுக்கான தலைமை அலுவலகம், இமாச்சல பிரதேசத்தில் உள்ள தர்மசாலாவில் அமைந்துள்ளது.

# சீனாவின் ஆக்கிரமிப்பினால் பாதிக்கப்பட்ட பல்வேறு நாடுகள் / இன மக்களின் சார்பில் "Strengthening Our Alliance to Advance the Peoples' Dream: Freedom, Justice, Equality and Peace" என்னும் தலைப்பில் ஜனநாயக மாநாடு தர்மசாலாவில் ஏப்ரல் 28 முதல் மே 01 வரை நடைபெறுகிறது.

# 2022ம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருமானத்தை இருமடங்காக உயர்த்துவதற்கான செயல்திட்டங்களை உருவாக்குவதற்கு, மத்திய விவசாயத்துறை கூடுதல் செயலளர் அசோக் தல்வை ( Ashok Dalwai ) தலைமையில் 8பேர் கொண்ட கமிட்டியை மத்திய அரசு நியமனம் செய்துள்ளது.

# 2018ம் ஆண்டுக்கான காமன்வெல்த் நாடுகளின் ஜூடோ சாம்பியன் போட்டி, ராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் நடைபெறவுள்ளது.

# ஆப்கானிஸ்தான் நாட்டில் அமைதியை நிலைநாட்டுவது பற்றிய " 6வது ஆசியாவின் இதயம் மாநாடு " ( 6th Heart Of Asia Conference ) டெல்லியில் ஏப்ரல் 26ல் நடைபெற்று முடிந்துள்ளது. இதற்கு முன் 5வது மாநாடு 2015 டிசம்பரில் பாகிஸ்தானில் நடைபெற்றுள்ளது.

# பாகிஸ்தானை சேர்ந்த மனித உரிமை ஆர்வலர் தபஸ்ஸம் அட்னன் ( Tabassum Adnan ) 2016ம் ஆண்டுக்கான Nelson Mandela – Graca Machel Innovation விருது பெற்றுள்ளார்.

# கேரளாவின் கோழிக்கோடு மாவட்ட ஆட்சியரால் அரசு சாரா திட்டமாக Operation Sulaimani என்னும் திட்டத்தை துவக்கியுள்ளார். இத்திட்டத்தின்படி மாவட்டத்தில் உள்ள மக்கள் எவரும் உணவின்றி உறங்க கூடாது என்பதேயாகும். மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தாலுகா மற்றும் கிராம அலுவலங்களில் டோக்கன் பெற்று குறிப்பிட்ட உணவகங்களில் இலவசமாக உணவருந்திகொள்ளலாம்.

# இந்தியாவிலேயே முதன்முறையாக, மேற்கு வங்காள சட்டமன்ற தேர்தலில் ரியா சர்கார் என்ற திருநங்கை வாக்குச்சாவடி தேர்தல் அலுவலராக பணியாற்றியுள்ளார். தெற்கு கொல்கத்தாவில், ரஷ்பீஹாரி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட Ballygunge

Government High Schoolஇல் அமைக்கபட்ட வாக்குச்சாவடியின் தேர்தல் அலுவலராக ஏப்ரல் 30அன்று பணியாற்றியுள்ளார்.

# பாபுவா நியு கினியா நாட்டின், வெஸ்ட் நியு பிரிட்டன் மாகாணத்தின் கவர்னராக தமிழகத்தை பூர்விகமாக கொண்ட சுசீந்திரன் முத்துவேல் பதவியேற்றுள்ளார்.
இவரது பூர்வீகம் சிவகாசி

# ஆந்திர மாநிலம் விசாகபட்டினம் கடற்கரையிலிருந்து 45 கடல் மைல் தொலைவில் வங்காள விரிகுடா கடலில் ஐஎன்எஸ் அரிஹந்த் நீர் மூழ்கி கப்பலில் இருந்து, ஏப்ரல் 14 அன்று அணுகுண்டை தாங்கிச் செல்லும் ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக பரிசோதனை செய்துள்ளது. ( கடலுக்கு அடியில் 20மீட்டர் ஆழத்தில் இருந்து ஏவப்பட்டுள்ளது.)
இந்த ஏவுகணைக்கு ரகசிய குறியீடாக K - 4 எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்த வகை ஏவுகணைகள் 2 ஆயிரம் கிலோ எடை கொண்ட அணுகுண்டை தாங்கி சென்று 3500 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இலக்கையும் தாக்கும் திறன் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது. இது போன்ற வசதி அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், இங்கிலாந்து, சீனா போன்ற ஒரு சில நாடுகளுக்கே உள்ளது.

# இந்திய தேர்தல் ஆணையம், கேரளா மாநில சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு e - voter என்னும் அலைபேசி செயலியை ( mobile app ) வெளியிட்டுள்ளது.

22nd CORPAT ( Indo -Thai Coordinated Patrol )
# இந்தியா மற்றும் தாய்லாந்து கடலோர காவல்படைகள் இணைந்து மேற்கொள்ளும் ரோந்து பயிற்சி 22வது CORPAT ( Indo -Thai Coordinated Patrol ), அந்தமான் கடற்பரப்பில் ஏப்ரல் 19 முதல் 27 வரை நடைபெற்று முடிந்துள்ளது.

செய்தி துளிகள்
01) கும்பகோணம் பள்ளி தீவிபத்தில் ( 2004ம் ஆண்டு ) உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோர்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பாக விசாரித்து அறிக்கை வழங்க உச்சநீதிமன்றம் நியமித்த ஒரு நபர் கமிசன் -- நீதியரசர் வெங்கட்ராமன்

02) மௌலிவாக்கம் பகுதியில் இடிந்து விழுந்த அடுக்குமாடி கட்டடத்தின் அருகே ஆபத்தான நிலையில் உள்ள மற்றொரு கட்டடத்தின் உறுதித் தன்மை குறித்து ஆராய உச்சநீதிமன்றம் நியமனம் செய்த நிபுணர் குழு --- --- --- வழக்குரைஞர் அசோக்குமார் குப்தா, ஐ.ஐ.டி. உதவி பேராசிரியர் சேஷாங், தேசிய கட்டடங்கள் கட்டுமானக் கழக பொது மேலாளர் எல்.பி.சிங்

03) இந்திய கிரிக்கெட் வாரியத்தில் முதன் முறையாக தலைமை செயல் அதிகாரி ( CEO) என்ற பதவி ஏற்படுத்தப்பட்டு திரு. ராகுல் ஜோஹ்ரி நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் செயலருக்கு கீழே பணிபுரிவார்.

04) மிகுந்த தண்ணீர் தட்டுப்பாட்டில் சிக்கியிருக்கும் மகாராஷ்டிரா மாநிலத்தில் 200 அடிக்கு அதிமாக ஆழ்துளை கிணறு அமைக்க அம்மாநில அரசு தடை விதித்துள்ளது.

05) கணித மேதை ராமானுஜத்தின் வாழ்க்கை வரலாறு The Man Who Knew Infinity என்ற பெயரில் ஹாலிவுட்டில் திரைப்படமாக எடுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.
இந்தியாவில் ஏப்ரல் 26ல் வெளியாகிறது.

06) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் மீது வன்கொடுமையில் ஈடுபடுவோர் மீது 10 ஆண்டுகள் தண்டனை விதிக்கும் சட்டம் ஏப்ரல் 14 முதல் அமலுக்கு வந்துள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

07) TATA குழுமத்திற்குட்பட்ட டாட்டா கன்சல்டன்சி சர்வீசஸ் மற்றும் டாட்டா அமேரிக்கா இண்டர்நேசனல் கார்ப் ஆகிய நிறுவனங்களுக்கு 94 கோடி அமெரிக்க டாலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. எபி சிஸ்டம்ஸ் என்னும் நிறுவனத்தின் மருத்துவம் சார்ந்த மென்பொருளை திருடியதற்காக அமெரிக்க நீதிமன்றம் இந்த அபராதத்தை விதித்துள்ளது.

08) மொனாக்கோ நாட்டில் நடைபெற்ற மாண்டி கார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் ஆண்கள் ஒற்றையர் போட்டியில் ஸ்பெயின் வீரர் ரபேல் நடால் ஒன்பதாவது முறையாக சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

09) முதன்முறையாக விண்வெளியில் கருமுட்டையை வளரச்செய்து சீனா சாதனை படைத்துள்ளது. கடந்த ஏப்ரல் 06ம் தேதி SJ - 10 விண்கலத்தில் எலிகளின் 6000 கருமுட்டைகளை அனுப்பி வளரச்செய்து இந்த சாதனையை செய்துள்ளது.

10) 2016ம் ஆண்டுக்கான புலிட்சர் விருது நியுயார்க் டைம்ஸ் மற்றும் தாம்சன் ராய்ட்டர் நிறுவங்களுக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இதுவரை நியுயார்க் டைம்ஸ் பத்திரிகை 117 புலிட்சர் விருதுகளை வென்றுள்ளது.

11) கடுமையான குளிர் பிரதேசமான வட துருவத்தில் நடைபெற்ற மராத்தான் ஓட்ட பந்தயத்தில் ( மைனஸ் 41 டிகிரி குளிர் ) அமெரிக்க வீரர் டான் பினிக்கர் முதலிடம் பிடித்துள்ளார்.

12 ) உத்தரகாண்டில் அமுல்படுத்தப்பட்ட குடியரசுத் தலைவர் ஆட்சியை ரத்து செய்து அம்மாநில உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

13) மத்திய பங்கு விலக்கல் துறைக்கு ( Dis Investment Department ) , முதலீடு - பொது சொத்து மேலாண்மை துறை என்று பெயர் மாற்றம் செய்து மத்திய அரசு

உத்தரவிட்டுள்ளது.

14) வட மத்திய ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள சாட் ( CHAD ) நாட்டுக்கான அமெரிக்கத் தூதர் பதவிக்கு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கீதா பாசியின் பெயரை அதிபர் ஒபாமா பரிந்துரைத்துள்ளார். ஏற்கெனவே வட கிழக்கு ஆப்பிரிக்க நாடான ஜிபூடியில், கடந்த 2011 முதல் 2014-ஆம் ஆண்டு வரை அமெரிக்கத் தூதராக அவர் பணியாற்றியுள்ளார்.
தற்போது அவர் வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் மனித வளப் பிரிவில் பணி மேம்பாட்டு இயக்குநராகப் பொறுப்பு வகித்து வருகிறார்.

16) 62 ஆண்டுகள் ராணியாக வீற்றிருக்கும் பிரிட்டிஷ் ராணி இரண்டாம் எலிசபெத் ஏப்ரல் 21ல் தனது 90-வது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

17) வெனிசூலாவில் கடும் மின்சாரத் தட்டுப்பாடு நிலவுவதையடுத்து, அந்த நாட்டு அரசு அலுவலகங்களுக்கு வாரம் 5 நாள் கட்டாய விடுமுறை அளித்து உத்தரவிட்டுள்ளது.

18) மும்பையில், ஆதர்ஷ் வீட்டு வசதி வாரியத்தினால் ராணுவ வீரர்களுக்காக கட்டப்பட்ட 31 மாடிகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பை இடிக்க மத்திய சுற்றுச் சூழல் அமைச்சகத்துக்கு மும்பை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
ராணுவ வீரர்களுக்காக கட்டப்பட்ட இந்தக் குடியிருப்பு விவகாரத்தில் ஊழல் நடைபெற்றதாக கடும் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதனையடுத்து வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு தொடர்பாக மகாராஷ்டிர முதல்வராக இருந்த அசோக் சவான் பதவி விலகினார்.

19) இந்திய-திபெத்திய எல்லைக் காவல் படையின் (ஐடிபிபி) வடகிழக்குப் பிராந்திய தலைமையகத்தை, மேகாலயத் தலைநகர் ஷில்லாங்கில் இருந்து அருணாசலப் பிரதேசத் தலைநகர் இட்டா நகருக்கு மாற்றத் தொடங்கியுள்ளது மத்திய அரசு.
அருணாசலப் பிரதேச எல்லைப் பகுதிக்குள் சீன ராணுவம் அடிக்கடி அத்துமீறலில் ஈடுபட்டு வருவதையடுத்து, மத்திய அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதற்காக, மேகாலயத்தில் இருந்து 2,000 ராணுவ வீரர்களுடன் கனரக வாகனங்கள், ஆயுதங்கள் ஆகியவை சுமார் 500 கி.மீ தொலைவு கடந்து அருணாசலப் பிரதேசத்துக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

20) சீனாவில் இருந்து பால், பாலில் இருந்து தயாரிக்கப்படும் பொருள்கள், குறிப்பிட்ட சில செல்லிடப் பேசிகள் ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது.

21) ஊழியர் வருங்கால வைப்புநிதி மீதான வட்டி விகிதத்தை 0.1% அதிகரித்து மத்திய நிதியமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் 8.7%-லிருந்து தற்போது 8.8% ஆக

அதிகரிக்கப்பட்டுள்ளது. ( சில மாதங்களுக்கு முன் 8.8%லிருந்து 8.7% ஆக நிதியமைச்சகம் குறைத்திருந்தது )

நடப்பு நிகழ்வுகள் வினா / விடை
================================

01) எட்டு வடகிழக்கு மாநிலங்களின் சுகாதார மேம்பாட்டுக்கு மத்திய குடும்பநலம் மற்றும் சுகாதார துறை அமைச்சகம் துவங்கியுள்ள திட்டத்தின் பெயர் என்ன ?

02) உலகிலேயே முதன்முறையாக வயதுவந்தோருக்கான பொழுதுபோக்கு பூங்கா துவங்கப்பட்டுள்ள நாடு எது ? ( world's first strictly adults-only sex-themed amusement park )

03) பெண் குழந்தைகள பாதுகாப்பிற்கு ராஜஸ்தான் மாநில அரசு தொடங்கிய திட்டம் எது?

04) Pearls Agrotech Corporation Ltd (PACL) நிறுவனத்தின் சொத்துக்களை விற்று, இந்நிறுவனத்தில் முதலீடு செய்தவர்களுக்கு ( ரூ.49,000 கோடி ) திரும்பி அளிக்கும் பணியை செய்ய உச்சநீதிமன்றம் யார் தலைமையில் குழுவை நியமனம் செய்துள்ளது?

*************************

தினமும் " நடப்பு நிகழ்வுகள் " செய்திகளை அறிந்து கொள்ள

Current Affairs for Competitive Exams ( https://www.facebook.com/Current-Affairs-for-Competitive-Exams-1463823397253925/ )
என்ற முகநூல் முகவரியில் பார்வையிடுங்கள்.

*************************

05) ஓட்டுனர் உரிமம், வாகன பதிவு சான்றிதழ் போன்றவற்றை சேமித்து வைத்துகொண்டு வாகன தணிக்கையின்போது பயன்படுத்த ஏதுவாக தெலுங்கானா மாநில அரசு வெளியிட்டுள்ள அலைபேசி செயலி ( Mobile app ) எது ?

06) மாற்றுத்திறனாளிகளுக்கு என தனிப்பட்ட அடையாள எண் வழங்கும் திட்டத்திற்கு மத்திய அரசு தேர்வு செய்துள்ள மாநிலம் எது?

07) 2016 UNESCO / Guillermo Cano World Press Freedom Prize வென்றவர் யார் ?

08) சிங்கப்பூரின் National Research Foundation (NRF) உதவித்தொகை பெற்ற இந்திய அறிவியல் விஞ்ஞானி யார் ?

09) உலக தடகளம் தினம் எது ?

10) பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற 2016 ஆசிய கபடி போட்டியில் ( circle style ) கோப்பையை வென்ற நாடு எது ?

11) BRICKS நாடுகளின் The New Development Bankவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ள முதல் இந்திய வங்கி எது?

12) மங்கோலியா நாட்டின் உயரிய விருதான NORTH STAR விருது பெற்றுள்ள இரண்டு இந்தியர்கள் யார் ?

13) திறந்தவெளி கழிப்பிடங்கள் இல்லா நகர்ப்புறங்கள் என்ற இலக்கை அக்டோபர் 02 / 2016க்குள் அடைய திட்டமிட்டு செயல்பட்டுவரும் மாநிலம் எது ?

14) மகாராஷ்டிரா மாநில அரசு, பழங்குடியினர் சாதி சான்றிதழின் validity certificateஐ onlineல் பெறுவதற்கு வெளியிட்டுள்ள அலைபேசி செயலி எது ?

15) ஒடிஷா மாநிலம், பூரி ஜெகநாதர் ஆலய புனரமைப்புக்கு ஆய்வு செய்துஉதவிய கல்வி நிறுவனம் எது?

16) இந்த ஆண்டு பிளாரன்ஸ் நைட்டிங்கேல் விருது பெற்றவர்கள் எத்தனை பேர்?

விடை
=======

01) Project Sunrise

02) பிரேசில் (Erotikaland Theme park )

03) Ashray

04) முன்னாள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி R.M. லோதா குழு

05) RTA - M Wallet

06) ஹரியானா

07) Khadija Ismayilova ( அசர்பைஜான் நாட்டை சேர்ந்தவர் )

08) Dr. Manvendra K Singh ( U.P. State)

09) மே 07

10) பாகிஸ்தான்

11) ICICI வங்கி

12) லோகேஷ் சந்த்ரா & மன்சூர ஹைதர் ( Lokesh Chandra & Mansura Haider )

13) ஆந்திரா

14) Adipraman app

15) IIT சென்னை

16) 35

## நடப்பு நிகழ்வுகள் வினா / விடை

===============================

01) Pradhan Mantri Fasal Bima Yojana எதனுடன் தொடர்புடையது?

02) குற்றச்செயல்களில் ஈடுபடும் இளஞ்சிறுவர்களின் வயது 18-லிருந்து எத்தனை வயதாக குறைக்கப்பட்டுள்ளது?

03) இந்திராகாந்தி விலங்கியல் பூங்கா அமைந்துள்ள இடம் எது?

04) 2016-ம் ஆண்டின் இந்தியாவால் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட முதல் செயற்கைகோள் எது? எந்த ராக்கெட் மூலம் அனுப்பப்பட்டது ? எங்கிருந்து ஏவப்பட்டது ?

05) வரி வசூலிப்பதை துரிதப்படுத்துவதற்கென டெல்லி அரசால் அறிமுகம் செய்யப்பட்ட App பெயர் என்ன?

06) சுற்றுலா பார்க்க வருபவர்களுக்கென Heli - Taxi அறிமுகம் செய்த இந்திய மாநிலம்?

07) டைட்டன் அறிமுகப்படுத்திய புதிய Smart Watch-ன் பெயர் என்ன ?

08) இந்தியா சமீபத்தில் ஒரு ஆம்புலன்ஸ் மற்றும் எட்டு பஸ்களை எந்த நாட்டிற்கு நன்கொடையாக வழங்கியது?

09) தேர்ந்தெடுக்கப்பட்ட20 Smart Cityகளில் தலைநகரங்கள் மொத்தம் எத்தனை?

10) ஜனவரி 28, 2016-ல் யாருடைய 150-ஆவது பிறந்த தினம் அனுசரிக்கப்பட்டது?

11) இந்தியன் இரயில்வே, ஒரு பயணாளி ஒரு மாதத்திற்கு எத்தனை முறை e டிக்கெட் பதிவு செய்யலாம் என அறிவித்துள்ளது ? இதற்கு முன்னர் எத்தனை முறை அனுமதிக்கப்பட்டு இருந்தது?

12) உலகத்தில் காசநோயால் அதிகபேர் பாதிப்புக்குளான நாடு?

13) ஆகாஷ் ஏவுகணை பரிசோதனை செய்யப்பட்ட இடம் எது ?

14) சமீபத்தில் மரணமடைந்த முன்னாள் ராணுவ தளபதி யார்?

15) Fare lock வசதியை அறிமுகம் செய்த விமான நிறுவனம் எது?

16) சமூக நீதிக்கான K.வீரமணி விருது 2015 பெற்றவர் யார்?

விடைகள்
---------------

01) பயிர் காப்பீட்டுத் திட்டம்

02) 16 வயது

03) விசாகப்பட்டினம்

04) IRNSS 1E செயற்கைகோள் ..., PSLV C-31 ராக்கெட் ... ஸ்ரீஹரிகோட்டா

05) DVAT Bill

06) உத்தரகாண்ட்

07) JUXT

08) நேபாளம்

09) 5

10) லாலா லஜபதி ராய்

11) தற்போது 6 முறை ... இதற்குமுன் 10 முறை

12) இந்தியா

13) ஒடிஷா மாநிலம், பாலாசூர்

14) K.V. கிருஷ்ணா ராவ்

15) ஜெட் ஏர்வேஸ்

16) பீகார் முதல்வர் நிதிஷ்குமார்

## நடப்பு நிகழ்வு வினாக்கள் மற்றும் விடைகள்

==========================================

1) 2016 ஆண்டின் பால் அண்ட் டெய்சி விருது – யாருக்கு வழங்கப்பட்டது?

2) மகாராஷ்டிரா மாநிலத்தில் கடுமையான தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டுள்ள லத்தூர் பகுதிக்கு ராஜஸ்தானின் மிராஜ் பகுதியிலிருந்து தண்ணீர் கொண்டும் செல்லும் இரயில் பெயர் என்ன?

3) தற்போது சர்வதேச நிதி செலவாணியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றில் 189 வது நாடாக இணைந்த நாடு எது?

4) நேபாள நாட்டில் முதல் முதலாக உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்ட முதல் பெண்மணி யார்?

5) ஏப்ரல் மாதம் அமெரிக்க அதிபர் ஒபாமா அவர்கள் யாரை அமெரிக்க தேசிய சைபர் பாதுகாப்பு அதிகரிப்பு ஆணையத்தின் உறுப்பினராக நியமித்துள்ளார்?

6) ஆட்டிஸம் குறைபாடுகள் குறைந்தபட்சம் எத்தனை சதவீதம் உள்ளவர்களை மாற்றுத்திறனாளிகளாக கருத வேண்டும் என்று மத்திய சமூக நீதிமன்றம் மற்றும் அதிகாரம் அளித்தல் அமைச்சகம் முடிவு செய்துள்ளது?

7) National Monument Authority – ன் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளவர் யார்?

8) ஓய்வு பெற்ற ஏர் மார்ஷல் அர்ஜீன் சிங்கை கவுரவிக்கும் விதமாக எந்த மாநிலத்தில் உள்ள விமானப்படை தளத்துக்கு அர்ஜீன் சிங் விமானபடைத்தளம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது?

9) 25 வது சுல்தான் அஸ்லான் ஷா ஹாக்கி கோப்பையை வென்ற அணி எது?

10) முதன் முறையாக இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பெண்களுக்கான கருத்தடை உறையின் பெயர் யாது?

11) சர்வதேச இணைப்பு குறியீடு (Global Connectivity Index) பட்டியலில் இந்தியா இடம்பெற்றுள்ள இடம் எது?

12) கப்பல்களை தாக்கும் வலிமையுள்ள ZARB என்ற ஏவுகணையை வெற்றிகரமாக பரிசோதனை செய்த நாடு எது?

13) ஐ.நா வின் தொழில்துறை வளர்ச்சி அமைப்பில், உலகின் பெரிய உற்பத்தியாளர்கள் பட்டியலில் இந்தியாவுக்கு எத்தனையாவது இடத்தை அளித்துள்ளது?

14) தேசிய குடும்பக் கட்டுப்பாடு உச்சி மாநாடு (The National Summit on Family Planning) – நடைபெற்ற இடம் எது?

15) SAWEN என்ற அமைப்பில் 8 வது உறுப்பு நாடாக இணைந்த நாடு எது?

16) இந்திய தடகள சம்மேளத்தின் தலைவராக இரண்டாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர் யார்?

17) தீர், சுஜாதா என்ற போர்க்கப்பல் மற்றும் கடலோர காவல்படை கண்காணிப்பு கப்பலான வருணா ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள முதலாவது பயிற்சி வீர்ர்களுக்கு இலங்கை கடல் பகுதியில் அளிக்கப்பட்ட பயிற்சி திட்டத்தின் பெயர் யாது?

18) ஷேக்ஸ்பியர் மரணம் அடைந்து 400 ஆண்டுகள் ஆனதையொட்டி எந்த நாட்டின் தபால்துறையானது நினைவு தபால்தலையை வெளியிட்டுள்ளது?

19) சிக்கிம் மாநிலத்தில் உள்ள National Institute of Technology – ல் அமைக்கப்பட்டுள்ள சூப்பர் கம்யூட்டரின் பெயர் யாது?

20) பீமாராவ் அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா – என்ற திட்டத்தை அறிமுகம் செய்துள்ள மாநிலம் எது?

21) இந்திய இராணுவம் இராஜஸ்தான் மாநிலத்தில் ஈடுபடுபட்டு வந்த தயார்நிலை பயிற்சி திட்டத்தின் பெயர் யாது?

22) நடைபெறவுள்ள ரியோ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கவுள்ள முதல் ஜிம்னாஸ்டிக் இந்திய வீராங்கனை யார்?

23) யோகா, தியானம் பற்றிய ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்காக மத்திய அறிவியல் தொழிநுட்ப அமைச்சகம் அறிவித்துள்ள திட்டம் எது?

24) உலகின் சிறந்த சொகுசு இரயில்கள் பட்டியலில் தொடர்ந்து 4 வது ஆண்டாக இடம்பெற்றுள்ள இந்திய இரயில் எது?

25) விளையாட்டின் ஆஸ்கர் என அழைக்கப்படும் லாரஸ் விருதுக்கு 2016 ஆண்டின் சிறந்த வீரராக தேர்வு செய்யப்பட்டவர் யார்?

26) விளையாட்டின் ஆஸ்கர் என அழைக்கப்படும் லாரஸ் விருதுக்கு 2016 ஆண்டின் சிறந்த வீராங்கனையாக தேர்வு செய்யப்பட்டவர் யார்?

27) முதன் முதலில் விண்வெளியில் கருமுட்டையை வளரச் செய்து சாதனை படைத்த நாடு எது? அந்த விண்கலத்தின் பெயர் யாது?

28) 2016 ஆண்டின் புலிட்சர் விருது யாருக்கு வழங்கப்பட்டது?

29) இந்திய கிரிக்கெட் வாரியத்தின் முதல் தலைமை செயல் அதிகாரி (CEO) யார்?

30) மத்திய ஆப்பிரிக்க நாடான சாத் நாட்டின் அமெரிக்க தூதராக எந்த இந்திய வம்சாவளியை ஒபாமா அவர்கள் நியமனம் செய்ய உத்தரவிட்டுள்ளார்?

31) மத்திய பங்கு விலக்கல் துறையை (Disinvestment Department) தற்போது மத்திய அரசானது எந்த பெயரால் மாற்றம் செய்து உத்தரவிட்டுள்ளது?

32) மலேரியா மற்றும் கொசுவினால் ஏற்படும் நோய்களில் இருந்து முற்றிலும் விடுபட்ட பகுதியாக தற்போது உலக சுகாதர அமைப்பானது எந்த நாட்டை அறிவித்துள்ளது?

33) உலக பத்திரிக்கை சுதந்திர குறியீட்டு எண் (World Press Freedom Index) பட்டியலில் இந்தியாவானது எத்தனையாவது இடத்தை பெற்றுள்ளது?

34) கோவா மாநில லோக் ஆயுக்தா நீதிபதியாக தற்போது நியமனம் செய்யப்பட்டுள்ளவர் யார்?

35) சர்வதேச ஹாக்கி போட்டிகளுக்கான நடுவராக யாரை நியமித்து சர்வதேச ஹாக்கி சம்மேளம் உத்தரவிட்டுள்ளது?

36) ரஷ்யா, இந்தியா மற்றும் சீனா வெளியுறவுத்துறை அமைச்சர்கள் அமைப்பின் 14 வது மாநாடு ஏப்ரல் 19-ல் எங்கு நடைபெற்று முடிந்தது?

37) ராமச்சந்திர பண்டாரங் தோப் (தாத்யா தோப்) அவர்களின் தியாகத்தை போற்றும் வகையில் மத்திய அரசானது எந்த மதிப்பிலான நாணயங்களை வெளியிட்டுள்ளது?

38) 2016 ஆண்டின் ரன்ஸ்டன் விருது பெற்ற நிறுவனம் எது?

39) வேளாண்மை குறித்து அனைத்து தகவல்களையும் அறிந்து கொள்ள மத்திய அரசால் வெளியிடப்பட்ட இணையதளம் எது?

40) உலக புவி நாள் கொண்டாடப்படும் நாள் எது?

41) இதய மாற்று அறுவை சிகிச்சை நோயாளிகளுக்கு உதவும் வகையில், இதயத்துக்கு இரத்தத்தை செலுத்தும் புதிய கருவியான Left Ventricular Assist Device – என்ற கருவியை எந்த விண்வெளி மைய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்?

42) கடலுக்கு அடியில் செல்லும் முதல் புல்லட் இரயிலானது எந்த இரு இடங்களுக்கு இடையே அமைய உள்ளது?

43) மகாராஷ்டிரா மாநிலத்தில் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள எந்த இரு கிராமங்களை திரைப்பட நடிகர் அமீர்கான் அவர்கள் தத்தெடுப்பதாக தெரிவித்துள்ளார்?

44) ஏப்ரல் 21 அன்று நடைபெற்ற 10 வது சிவில் சர்வீஸ் தினத்தில் தூய்மை இந்தியா திட்டத்திற்காக விருது பெற்ற மாநிலம் எது?

45) 10 வது சிவில் சர்வீஸ் தினத்தில் பிரதமர் மோடி அவர்கள் வெளியிட்ட 3 புத்தகங்கள் எது?

46) AN UNDOCUMENTED WONDER – THE MAKING OF THE GREAT INDIAN ELECTION – என்ற புத்தகத்தை எழுதியவர் யார்?

47) ஏப்ரல் 22 அன்று பாரீஸ்சில் நடைபெற்ற பருவநிலை ஒப்பந்தத்தில் புவியின் வெப்பநிலை உயர்வானது எத்தனை செல்சியத்திற்கு மிகாமல் கட்டுப்படுத்த வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது?

48) சேவைத்துறையில் மிக வேகமான வளர்ச்சி கண்டு வரும் நாடுகளில் இந்தியா எத்தனையாவது இடத்தில் உள்ளது?

49) Exercise Nomadic Elephant – என்பது எந்த இரு நாடுகளுக்கிடையே நடைபெறும் இராணுவ பயிற்சி ஆகும்?

50) 11 வது Exercise Nomadic Elephant என்ற இராணுவ பயிற்சி நடைபெற்ற இடம் எது?

51) உலக மலேரியா தினம் கொண்டாடப்படும் நாள் எது?

52) நடக்க இருக்கும் ரியோ டி ஜெனீரோ ஒலிம்பிக் போட்டியில் இந்தியா சார்பில் பங்கேற்க இருக்கும் ஒரே துடுப்பு படகு வீரர் யார்?

53) 2016 ஆண்டின் ஆசியாவின் இதயம் மாநாடு நடைபெற்ற இடம் எது?

54) பெண்களுக்கான வில்வித்தை போட்டியில் உலக சாதனையை சமன் செய்த இந்திய வில்வித்தை வீராங்கனை யார்?

55) Ameason நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியின் பிரேத்யேக குழுவில் அமேசான் இந்திய பிரிவின் நிர்வாக இயக்குநராக தற்போது நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

56) IRNSS - 1G என்ற செயற்கைகோளானது எந்த இராக்கெட் மூலம் அனுப்பப்பட்டது? அந்த செயற்கை கோளின் மொத்த ஆயுட்காலம் யாது?

57) இந்தியா மற்றும் தாய்லாந்து கடலோர காவல் படைகள் இணைந்து மேற்கொள்ளும் 22 வது CORPAT ரோந்து பயிற்சியானது நடைபெற்ற இடம் எது?

58) E – VOTER என்னும் அலைபேசி செயலியை வெளியிட்டுள்ள மாநிலம் எது?

59) INS அரிஹந்த் நீர் மூழ்கி கப்பலில் இருந்து ஏப்ரல் 14 அன்று இந்தியா வெற்றிகரமாக பரிசோதனை செய்த அணுகுண்டை தாங்கி செல்லும் ஏவுகணையின் பெயர் யாது?

60) பாபுவா நியு கினியா நாட்டின், வெஸ்ட் நியு பிரிட்டன் மாகாணத்தின் கவர்னராக தமிழகத்தை சேர்ந்த யார் தற்போது பதவியேற்றுள்ளார்?

விடைகள் :-
############

1) துர்க்கா தாக்ரல் (இந்திய வம்சாவளி மாணவி)

2) JALDOOT – ஜல் தூத்

3) பசுபிக் பெருங்கடலில் அமைந்துள்ள The Republic of Nauru என்ற நாடு

4) சுசிலா கார்கி

5) இந்திய அமெரிக்க மாஸ்டர் கார்டு நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி அஜய் பங்கா

6) 40%

7) திருமதி.சுஷ்மிதா பாண்டே

8) மேற்கு வங்கம் – பனகார் விமானபடைத்தளம்

9) ஆஸ்திரேலிய அணி (எதிரணி – இந்தியா)

10) VelVet

11) 44 வது இடம் (அமெரிக்கா முதல் இடம்)

12) பாகிஸ்தான்

13) 6 வது இடம் (இதற்கு முன் 9 வது இடத்தில் இருந்தது)

14) புது டெல்லி (ஏப்ரல் 04 & 05)

15) இந்தியா (மற்ற நாடுகள் - மாலத்தீவுகள், இலங்கை, பாகிஸ்தான், பங்காளதேஷ், நேபாள், பூடான், ஆப்கானிஸ்தான்)

16) அடில்லே சுமரிவள்ள

17) PASSEX – 2016

18) பிரிட்டன் தபால்துறை

19) PARAM KANCHENJUNGA - பரம் கஞ்சன்சுங்கா

20) ஜார்க்கண்ட்

21) Shatrujeet ( ராஜஸ்தான் – ஜைசல்மார் நகருக்கு அருகில்)

22) தீபா கம்ராகர்

23) சத்யம் திட்டம்

24) மகாராஜா எக்ஸ்பிரஸ்

25) ஜோகோவிச் (செர்பிய வீரர்)

26) செரினா வில்லியம்ஸ்

27) சீனா – SJ – 10 விண்கலம் (எலிகளின் 6000 கருமுட்டைகள்)

28) நியுயார்க் டைம்ஸ் மற்றும் தாம்சன் ராய்ட்டர்

32) ஐரோப்பா

33) 133 வது இடம் (கடந்த ஆண்டு 136 வது இடம்)

34) நீதியரசர் P.K.மிஸ்ரா

35) துர்கா தாகுர்

36) மாஸ்கோ

37) ரூ.200 மற்றும் ரூ.10

38) கூகுள் இந்தியா

39) தி அக்ரி ஹப் (தி அக்ரி ஹப் நிறுவனத்தின்  தலைமை செயல் அதிகாரி – ராஜீப் குமார் ராய்)

40) ஏப்ரல் 22 (Theme – Tress for the earth)

41) விக்ரம் சாராபாய் விண்வெளி மைய விஞ்ஞானிகள்

42) மும்பை – ஆமதாபாத் (508 KM)

43) தால் மற்றும் கோரகோவ்

44) பீகானீர் மற்றும் சிக்கிம்

45) The Change Makers, Transforming India மற்றும் Recreating Excellence

46) முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் திரு.S.Y. குரேஷி

47) 2 டிகிரி செல்சியஷ்

48) 2 வது இடம்

49) இந்தியா மற்றும் மங்கோலியா

50) மங்கோலியா

51) ஏப்ரல் 25 (Theme – End Malaria for good)

52) டத்து பாபன் போகனல்

53) இந்தியா – டெல்லி

54) தீபிகா குமாரி

55) அமித் அகர்வால்

56) PSLV C – 33 ; 12 ஆண்டுகள்

57) அந்தமான் கடற்கரை

58) கேரளா மாநிலம்

59) K – 4 ஏவுகணை

60) சுசீந்திரன் முத்துவேல்

*************************

தினமும் " நடப்பு நிகழ்வுகள் " செய்திகளை அறிந்து கொள்ள

Current Affairs for Competitive Exams ( https://www.facebook.com/Current-Affairs-for-Competitive-Exams-1463823397253925/ )

என்ற முகநூல் முகவரியில் பார்வையிடுங்கள்.

*************************

நடப்பு நிகழ்வுகள் வினாக்கள், விடைகள்

=====================================

01) சமீபத்தில் இந்தியாவுக்கு வருகை தந்த பிரிட்டிஷ் அரசகுடும்பத்தினர் எந்த உயிரியல் பூங்காவை சுற்றிப்பார்த்தனர் ?

02) சமீபத்தில் எந்த விளையாட்டுக்கான தடையை சீனா விலக்கியுள்ளது?

03) அமெரிக்க ராணுவத்தில் முதன்முறையாக தாடி மற்றும் டர்பன் அணிந்துகொள்ள அனுமதி பெற்ற இந்திய வம்சாவளி சீக்கியர் யார் ?

04) எந்த மாநிலத்தில் / நகரத்தில் மெட்ரோ ரயில் நிலையத்திற்கு அம்பேத்கர் பெயர் சூட்டப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது?

05) புகழ்பெற்ற நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளினுக்கு 2016 ஏப்ரலில் அருங்காட்சியகம் எங்கு துவங்கப்பட்டுள்ளது?

06) " கிராம விடியல், பாரதத்தின் விடியல் " என்ற பிரச்சார திட்டத்தை பிரதமர் மோடி எங்கு துவக்கிவைத்துள்ளார்?

07) சமீபத்தில் பிரதமர் மோடி எந்த மாநிலத்தில் பல்நோக்கு மருத்துவமனையை ( Multi Speciality Hospital ) திறந்து வைத்துள்ளார்? அம்மருத்துவமனையின் பெயர் என்ன ?

08) TWITTER சமூக வலைத்தளம் மேற்கொண்ட பெண்களின் மேம்பாடு பற்றிய பிரச்சாரத்தின் வாசகம் என்ன ?

09) கிராமப்புற அஞ்சலங்களை இணையம் வழியாக இணைப்தற்கு மத்திய அரசு எந்த ஆண்டை இலக்காக நிர்ணயம் செய்துள்ளது?

10) அனைத்து தேசிய நெடுஞ்சாலைகளிலும் ரயில்வே இருப்புபாதை குறுக்கீடு இல்லாமல் மேம்பாலங்கள் அமைப்பதற்காக சமீபத்தில் துவக்கப்பட்ட திட்டம் எது?

11) 2016ம் ஆண்டுக்கான புரோ கபடி லீக் சாம்பியன் பட்டம் வென்ற அணி எது ?

12) 2016ம் ஆண்டுக்கான கிரிஷி சிரோமணி சம்மான் விருது பெற்றவர் யார் ?

13) மும்பை பங்குச்சந்தை எனப்படும் BOMBAY STOCK EXCHANGEன் தலைவராக பொறுப்பேற்றுள்ளவர் யார்?

14) சிட்டுக்குருவிகளை பாதுகாக்க விழிப்புணர்வு பிரச்சாரம் துவக்கிய மாநிலம் எது?

15) ஆந்திர மாநில அரசு அறிமுகம் செய்துள்ள அகன்ற அலைவரிசை திட்டத்தின் பெயர் என்ன?

16) மூன்றாம் வகுப்பு வரை மட்டுமே படித்து பத்ம ஸ்ரீ விருது பெற்றுள்ள கவிஞர் யார் ? எந்த மொழி ? எந்த மாநிலம் ?

17) பொது இடங்களில் எச்சில் துப்புபவர்களுக்கு ரூ500 அபராதம் விதிக்கப்படும் என அறிவித்த மாநகராட்சி எது?

18) ராஜஸ்தானின் எந்த கிராமத்தில் முழு மதுவிலக்கு அமல்படுத்தப்பட்டுள்ளது?

19) இந்தியாவும் சீனாவும் இணைந்து உருவாக்கியுள்ள யோகா கல்லூரி சீனாவில் எங்கு அமைக்கப்பட்டுள்ளது?

20) நாட்டிலேயே வருமானவரி பாக்கி வைத்துள்ளவர்கள் அதிகம் உள்ள மாநிலம் எது ? ( வருமானவரித்துறை வெளியிட்டுள்ள பட்டியலின்படி)

21) தூய்மை இந்தியா திட்டத்திற்கு பத்தாயிரம் கோடி கடன் வழங்க முன்வந்துள்ள அமைப்பு / வங்கி எது ?

22) சிகரெட் பாக்கெட்டுகளில் எவ்வளவு சதவிகித அளவிற்கு எச்சரிக்கை படம் இடம்பெற வேண்டும் என மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.?

23) சமீபத்தில் எந்த நாட்டின் செயற்கைக்கோள் விண்வெளியில் காணமல்போனது ? அந்த செயற்கைகோளின் பெயர் என்ன ?

24) சமீபத்தில் ஆந்திராவின் கிருஷ்ணபட்டினம் துறைமுகத்திலிருந்து பங்களாதேஷ் நாட்டின் எந்த துறைமுகங்களுக்கு நேரடி கண்டெய்னர் சரக்கு போக்குவரத்து துவங்கப்பட்டுள்ளது?

25) உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள மானா கணவயை முதன்முதலாக இருசக்கர வாகனம் மூலம் கடந்து லிம்கா சாதனை புத்தகத்தில் இடம் பெற்றவர் யார்?

விடைகள்

---------------

01) அசாமில் உள்ள காசிரங்கா பூங்கா

02) கோல்ப் விளையாட்டு

03) கேப்டன் சிம்ரத்பால் சிங்

04) பெங்களூரில், விதான் சௌதா எதிரே உள்ள மெட்ரோ ரயில் நிலையத்திற்கு அம்பேத்கர் பெயர் சூட்டப்படும் என கர்நாடகா மாநில அரசு அறிவித்துள்ளது.

05) சுவிட்சர்லாந்து

06) மத்திய பிரதேசத்தில் உள்ள மாஹூ கிராமம் ( அண்ணல் அம்பேத்கர் பிறந்த ஊர் )

07) காஷ்மீர் மாநிலம் , ஸ்ரீ மாதா வைஷ்ணவாதேவி நாராயணா சூப்பர் ஸ்பெசாலிட்டி மருத்துவமனை

08) # Position Of Strength

09) 2017 மார்ச்

10) சேது பாரதம்

11) பாட்னா பைரேட்ஸ்

12) டாக்டர் அம்ரிதா படேல்

13) சுதாகர் ராவ்

14) உத்தரப்பிரதேசம்

15) AP Fiber Net

16) ஹல்தார் நாக் .., கொஸ்லி மொழி .., ஒடிஸா மாநிலம்

17) புனே

18) கச்சபாலி கிராமம்

19) குன்மிங் நகரம் ( Kunming city )

20) முதலிடம் - குஜராத் ., இரண்டாமிடம் - மகாராஷ்டிரா ., மூன்றாமிடம் - தெலுங்கனா

21) உலக வங்கி

22) 85 %

23) ஜப்பான் நாடு ..., ஹிட்டோமி செயற்கைக்கோள்

24) சிட்டகாங் மற்றும் பாங்காவோன் துறைமுகங்கள் ( எம். பி. ஹார்பர் - 1கப்பல் மூலம் )

25) பல்லவி பஸ்தார்

## நடப்பு நிகழ்வுகள் வினாக்கள், விடைகள்

---------------------------------------------------------------

1) ஏப்ரல் 01, 2016 அன்று முதல் தமிழக வானிலை இயக்குநராக பதவியேற்றவர் யார்?

2) சர்வதேச சிறுவர் புத்தக தினம் மற்றும் உலக மன இறுக்க விழிப்புணர்வு நாள் ஆகிய தினங்கள் கொண்டாடப்படும் நாள் எது?

3) ஆசியாவின் மிகப்பெரிய ஆப்டிகல் டெலஸ்கோப்பான ARIES (Aryabhatta Research Institute of observational sciences) அமைக்கப்பட்டுள்ள இடம் எது?

4) மத்திய மனிதவளா மேம்பாட்டுத்துறை அமைச்சகம் இந்திய தரவரிசை 2016 என்ற தலைப்பில் நாட்டில் செயல்படும் கல்வி நிலையங்களில் மருந்தியல் பிரிவில் எந்த மாநில அறிவியல் கல்லூரியானது முதல் இடம் பிடித்தது?

5) உலகில் முதல் வெள்ளை புலிகள் சரணாலயம் தொடங்கப்பட்டுள்ள இடம் எது?

6) அமெரிக்காவின் அலாஸ்காவில் நடைபெற்ற RED FLAG EXERCISE 2016 என்ற போர் பயிற்சியில் இந்தியாவின் போர் விமானங்கள் எத்தனையாவது முறையாக பங்கேற்றன?

7) இந்தியாவின் முதல் அதிவேக இரயிலான கதிமன் இரயிலானது டெல்லி-ஆக்ரா இடையேயான தொலைவை எத்தனை நிமிடங்களில் சென்றடையும்?

8) The Balikatan Exercise (தோளோடு தோள் பயிற்சி) என்ற ராணுவ பயிற்சியானது எந்த இரு நாடுகளுக்கிடையே ஏப்ரல் 04 முதல் 14 வரை நடைபெற்றது?

9) இந்தியாவில் முதன் முதலில் ஆதார் ஏடிம் (ADHAR ATM) அறிமுகம் செய்த வங்கி எது?

10) Stand Up India – என்ற திட்டம் தொடங்கப்பட்ட இடம் எது?

11) ரிசர்வ் வங்கி இந்த ஆண்டின் முதல் அறிக்கையின் படி ரிப்போ ரேட்டானது எத்தனை சதவீதமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது?

12) ASHRAY - என்ற திட்டத்தை தொடங்கியுள்ள மாநிலம் எது?

13) தேசிய கடல்சார் தினம் கொண்டாடப்படும் நாள் எது?

14) Standing Guard – A Year in Opposition – என்ற புத்தகத்தை எழுதியவர் யார்?

15) ஆதர்ஸ் வித்லாயா என்ற திட்டத்தை துவங்கியுள்ள இந்திய மாநிலம் எது?

16) இந்திய – பாகிஸ்தான் எல்லை பாதுகாப்பை பலப்படுத்துவது பற்றிய பரிந்துரைகளை வழங்குவதற்கு மத்திய அரசானது யாருடைய தலைமையில் குழு ஒன்றை நியமனம் செய்துள்ளது?

17) CAT – (Central Administrative Tribunal) – என்ற அமைப்பின் தலைவராக தற்போது பதவியேற்றுள்ளவர் யார்?

18) First North East Asean Business Summit - மாநாடு நடைபெற்ற இடம் எது?

19) இந்தியாவில் சிறந்த சிற்றுலாத்தலமாக தேர்வு செய்யப்பட்டுள்ள சுற்றுலாத்துறை எது?

20) ஆசிய வணிக உலகின் ஆற்றல் மிக்க பெண்மணிகள் பட்டியலில் முதல் இடம் பிடித்த பெண்மணி யார்?

21) 2016 ஆம் ஆண்டின் இந்திய அழகியாக தேர்வு செய்யப்பட்டவர் யார்?

22) பத்திரிக்கைகளில் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் பற்றிய விளம்பரங்களை உருவாக்குவதற்கு மத்திய அரசனாது யார் தலைமையில் குழு ஒன்றை நியமனம் செய்துள்ளது?

23) Wheels Behind the veil – Pms, Cms and Beyond – என்ற புத்தகத்தை எழுதியவர் யார்?

24) பிரிட்டனின் மிக உயரிய விருதான புவுண்ட்டர்ஸ் விருது தற்போது யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?

25) தமிழக பல்கலைக்கழகங்களில் முதன் முறையாக ஆன்லைனில் தேர்வு எழுதும் முறையை அறிமுகம் செய்துள்ள பல்கலைக்கழகம் எது?

26) 53 உறுப்பு நாடுகளை கொண்ட காமன்வெல்த் அமைப்பின் முதல் பெண் பொதுச்செயலாளராக பொறுப்பேற்றவர் யார்?

27) சார்க் நாடுகளின் 3வது வேளாண்துறை அமைச்சர்கள் கூட்டம் ஏப்ரல் 07 அன்று எங்கு நடைபெற்றது?

28) 2016 ஆண்டுக்கான UNESCO / Guillermo Cano world press freedom prize விருதை பெற்றவர் யார்?

29) காவல் மற்றும் மேம்பாட்டு துறையின் {Bureau of police research and development} டைரக்டர் ஜெனரலாக தற்போது நியமனம் செய்யப்பட்டுள்ளவர் யார்?

30) தற்போது G7 நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களின் மாநாடு எங்கு நடைபெற்று முடிந்தது?

31) மனித விண்வெளி பயணத்துக்கான சர்வதேச நாளாக கொண்டாடப்படும் நாள் எது?

32) ஏப்ரல் 12 – 14 வரை புலிகளை காப்பது பற்றிய ஆசிய நாடுகளின் அமைச்சர்கள் அளவிலான 3வது மாநாடு எங்கு நடைபெற்றது?

33) India’s War the making of modern south asia 1939 – 1945 என்ற நூலை எழுதியவர் யார்?

34) முதலாவது தேசிய பழங்குடியினர் திருவிழா (First National Tribal Carnival) நடைபெற்ற இடம் எது?

35) 2016 ஆண்டின் Water Film Festival விழா நடைபெற்ற இடம் எது?

36) தற்போது பெயர் மாற்றம் செய்யப்பட்ட குருகிராம் என்ற தொழில் நகரம் அமைந்துள்ள மாநிலம் எது?

37) தற்போது ஆந்திர மாநிலத்தின் சுற்றுலாத்துறையின் விளம்பர தூதுவர்களாக நியமனம் செய்யப்பட்டவர்கள் யார்?

38) 2015 ஆண்டின் சரஸ்வதி சம்மான் விருது யாருக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது?

39) ஏப்ரல் 13 அன்று ஐ.நா சபையில் அம்பேத்கரின் எத்தனையாவது பிறந்த நாளானது முதன் முறையாக கொண்டாடப்பட்டது?

40) மலிவு விலை காது கேட்கும் கருவியை கண்டறிந்த இந்திய வம்சாவளி மாணவனின் பெயர் யாது?

விடைகள்:
-------------------

1) எஸ்.பாலச்சந்திரன்

2) ஏப்ரல் 2

3) உத்தர்கண்ட் மாநிலம் – நைனிடால் மாவட்டம் –
தேவஸ்தல் நகர்

4) மணிப்பால் மருந்தியல் அறிவியல் கல்லூரி

5) மத்தியபிரதேசம் மாநிலம் – சாத்னா மாவட்டம் – முகுந்த்பூர்

6) 2 வது முறையாக (இதற்கு முன் 2008 ஆம் ஆண்டு பங்கேற்றன)

7) 100 நிமிடங்கள் (01 மணி 40 நிமிடங்கள்)

8) அமெரிக்கா மற்றும் பிலிப்பைன்ஸ்

9) மகாராஷ்டிராவை சேர்ந்த DCB வங்கி

10) டெல்லி அருகில் உள்ள நொய்டா

11) 0.25% குறைத்து 6.50% நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது

12) ராஜஸ்தான்

13) ஏப்ரல் 05

14) முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம்

15) ஒடிசா

16) மதுக்கர் குப்தா

17) ஓய்வு பெற்ற நீதியரசர் பிரமோத் கோலி

18) மணிப்பூர் – இம்பால்

19) கர்நாடகா மாநிலம் – கார்வார் – தண்டெலி
சுற்றுலாத்துறை

20) நீட்டா அம்பானி

21) பிரியதர்ஷினி சட்டர்ஜி

22) B.B.தாண்டன்

23) P.V.R.K.பிரசாத்

24) அன்னை தெரேசா

25) சென்னை பல்கலைக்கழகம்

26) பெட்ரிசியா ஸ்காட்லாண்ட்

27) டாக்கா (வங்காளதேசம்)

28) அசர்பைஜான் நாட்டை சேர்ந்த புலனாய்வு செய்தியாளர் Khadija Ismayilova

29) Ms.Meeran C.Borwankar IPS

30) ஜப்பான் – ஹீரோஷிமா நகர்

31) ஏப்ரல் 12

32) புது டெல்லி

33) ஸ்ரீநாத் ராகவன்

34) புது டெல்லி

35) புது டெல்லி

36) ஹரியானா மாநிலம்

37) அஜய் தேவகன் மற்றும் அவர் மனைவி கஜோல்

38) திருமதி.பத்மா சச்தேவ்

39) 125 வது பிறந்த நாள்

40) முகுந்த் வெங்கட கிருஷ்ணன்

## நடப்பு நிகழ்வுகள் வினாக்கள், விடைகள்

------------------------------------------------------------

01) 103வது இந்திய அறிவியல் மாநாடு 2016 நடைபெற்ற இடம்?

02) புலிகளை காப்பது பற்றிய ஆசிய நாடுகளின் அமைச்சர்கள் அளவிலான 3வது மாநாடு (3rd Ministerial Conference on Tiger Conservation)நடைபெற்ற இடம்?

03) 2016க்கான அறிவுசார் சொத்து [IP-Intellectual Property] விருது பெற்ற கல்வி நிறுவனம் எது ?

04) 19வது தேசிய மின் ஆளுமைக்கான கூடுகை நடைபெற்ற இடம் எது?

05) 2016ம் ஆண்டிற்கான கிரிஷி கர்மான் விருது வென்ற மாநிலம் எது ?

06) கடல்சார் உச்சி மாநாடு 2016 நடைபெற்ற இடம் எது?

07) குழந்தை தத்தெடுப்பு பற்றிய வடகிழக்கு மாநிலங்கள் பிராந்திய மாநாடு நடைபெற்ற இடம் எது?

08) 19வது சார்க் மாநாடு நடைபெறவுள்ள இடம் எது ?

09) தேசிய குடும்ப கட்டுப்பாடு மாநாடு நடைபெற்ற இடம் எது ?

10) இந்தியாவில் Make in India மாநாடு நடைபெற்ற இடம் எது?

11) இந்தியாவிற்கு வெளியே Make in India மாநாடு நடைபெற்ற இடம் எது?

12) 13வது ஐரோப்பிய - இந்திய மாநாடு நடைபெற்ற இடம்?

13) 2016க்கான G20 மாநாடு நடைபெறவுள்ள இடம் எது ?

14) சர்வதேச மொபைல் போன் மாநாடு நடைபெற்ற இடம் எது?

15) உலக பூஜ்ஜியமாநாடு 2016 நடைபெற்ற இடம் எது ?

16) BRICS நட்பு நகரங்கள் மாநாடு நடைபெற்ற இடம் எது ?

17) 4வது அணு ஆற்றல் மாநாடு நடைபெற்ற இடம் எது?

18) சர்வதேச மூங்கில் மாநாடு நடைபெற்ற இடம் எது?

19) G7 நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களின் மாநாடு நடைபெற்ற இடம் எது ?

20) வடகிழக்கு ஆசிய நாடுகளுக்கான வணிக மாநாடு நடைபெற்ற இடம் எது?

21) 4வது உலக உயிர்கோள பாதுகாப்பு மாநாடு நடைபெற்ற இடம் எது ?

22) சர்வதேச பூர்வகுடி - பழங்குடியின (International Indigenous Terra Madre) மாநாடு நடைபெற்ற இடம் எது?

23) 2016க்கான இஸ்லாமிய உச்சி மாநாடு நடைபெறவுள்ள இடம் எது?

24 ) 4வது இந்திய-ஆப்பிரிக்க ஹைட்ரோ கார்பன் மாநாடு நடைபெற்ற இடம் எது?

25) முதலாவது உலக சூஃபி மாநாடு நடைபெற்ற இடம் எது?

26) முதலாவது ரைசினா பேச்சுவார்த்தை மாநாடு ( First Raisina - Dialogue 2016 ) நடைபெற்ற இடம் எது?

27) 43வது ஸ்காட்ச் மாநாடு நடைபெற்ற இடம் எது?

28) இந்திய அரசு மற்றும் IMF இணைந்து நடத்திய "Advaning Asia" மாநாடு நடைபெற்ற இடம் எது ?

## விடைகள்

=========

01) மைசூரு

02) புதுடில்லி

03) IIT காரக்பூர்

04) நாக்பூர் - மஹாராஷ்டிரா

05) மேகலாயா

06) மும்பை

07) ஷில்லாங்

08) இஸ்லாமாபாத்

09) டெல்லி

10) மும்பை ( பிரதமர் மோடி கலந்து கொண்டுள்ளார்)

11) சிட்னி ( ஆஸ்திரேலியா) { நிதியமைச்சர் அருண் ஜெட்லி கலந்து கொண்டுள்ளார்}

12) பிரஸ்ஸல்ஸ், பெல்ஜியம்

13) சீனா

14) பார்ச்சிலோனா ஸ்பெயின்

15) பிரான்ஸ் தலைநகர் பாரிஸ்

16) மும்பை

17) வாஷிங்டன், அமெரிக்கா

18) இந்தூர்,மத்திய பிரதேசம்

19) ஹிரோஷிமா, ஜப்பான்

20) இம்பால்,மணிப்பூர்

21) லிமா, பெரு

22) மேகாலயா

23) துருக்கி

24, 25, 26, 27 & 28 ) புது டெல்லி

***********************************

**For Current affairs Materials Visit: www.tnpscjob.com**